மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

லர் 2 | 1 - 12 - 53 | இத



ள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளி நாடு அண

உரிமைக்குரல்

வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும், உரிமைக்குரல் எழுப்புவோர்மீது ஆதிக்கவெறியர்களின் அடக்குமுறை பாய்ந்த படிதான் இருந்திருக்கிறது. உரிமைக்குரலை அடக்க, அரசாங்கங்கள் தொடுத்த சட்டங்கள், கட்டிய சிறைச்சாலைகள், நீட்டிய துப்பாக்கிகள், பாய்ச்சிய குண்டுகள் பலப்பல. ஆனால் உரிமைப் போராட்டம் வளர்ந்திருக்கிறது, இந்தத் தடைகளை மீறிக் கொண்டு.

சிறு பொறி பெருந் தீயாவதுபோல் ஒரிருவர் எழுப்புகிற உரிமைக்குரல் நாட்டின் விடுதலை முழக்கமாகியிருக்கிறது.

ஆதிக்க வெறியர்கள் முதலில் உரிமைப்போராட்டங்களை அலட்சியப்படுத்துவார்கள், ஆணவத்தோடு பார்ப்பார்கள், இழிவாகப் பேசுவார்கள், பழிச்சொற்கள் வீசுவார்கள், பின் சட்ட திட்டங்களைப் புரட்டுவார்கள், அடக்குமுறைகளால் தாக்குவார்கள். கொடுமைச் சிறையிலே, ரத்தவெள்ளத்திலே அடக்கிவிட முயலுவார்கள். ஆனால் எழுந்தகுரல் அடங்குவதில்லை. விழித்த மக்கள் வீழ்வதில்லை. இறுதியில் அடக்குமுறைதான் அடங்கியிருக்கிறது; ஆட்டிப்படைத்த சாம்ராஜ்யங்கள் சரிந்திருக்கின்றன, ஆர்ப்பரித்த சர்வாதிகாரிகள் மிரண்டோடியிருக்கின்றனர், உரிமையாளர் வெற்றிபெற்றனர். வரலாறு திரும்பியிருக்கிறது, அந்த உறுதியாளர் காட்டிய உறுதிகண்டு.

திராவிடத்தின் வரலாறு திரும்புகிறது. “டில்லி ஏகாதிபத்தியத்துக்கு அடிமைநாடாக, வடநாட்டு முதலாளித்துவத்துக்கு சந்தைக்காடாக, வர்ணாச்சிரம திட்டத்துக்கு ஏற்ற இடமாக, இனித் திராவிடம் இருக்காது” என்ற உரிமைக்குரல் எழுப்பப் பட்டுவிட்டது. அந்த உரிமைக்குரல் எழுப்பிய முன்னணி வீரர்களில் ஆறுபேர்—உரிமைப்போராட்டத்தில் முன்னின்று அடக்குமுறையின் தாக்குதலை ஏற்றுக்கொண்ட அவர்கள் சிறையினின்றும் மீண்டும் வெளிவந்துள்ளனர்.

உரிமைக்குரல் எழுப்பியவர்கள், உற்ற திராவிடம் தழைக்கப் பாடுபடுவோர், மங்காத வீரர்கள், மாப்புகழின் சின்னங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்கள்—அவர்கள் பேச்சிலே விடுதலைகீதம் பிறந்தது, பார்வையிலே இன்பத்திராவிடம் மலர்வதாகும்.

வாழ்க உரிமை வீரர்கள்! வாழ்க வளமார் திராவிடம்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

1-12-53 செவ்வாய்க்கிழமை

வரவேற்கிறோம்

சிறைக்கதவுகள் திறக்கின்றன. அடைபட்டுக்கிடந்த வீரர்கள் மீண்டும் வந்து, மக்களிடையே உலவுகின்றனர்.

திராவிடத்தை அடிமைப்படுத்தும் டில்லி ஆதிபத்தியத்தை எதிர்த்து, தென்னாட்டைச் சுரண்டும் வடநாட்டு முதலாளித்துவத்தை எதிர்த்து, நாட்டு மக்களை இழிவுபடுத்தும் வர்ணாச்சிரமத் திட்டத்தை எதிர்த்து, திராவிடத்தின் இதயக் குரலாம் திராவிட முன்னேற்றக்கழகத்தினர் தொடுத்த போரில்—மூன்று முனைகளில் ஒரே சமயத்தில் தொடங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு எண்ணற்ற வீரர்கள்—நாட்டின் இளங்காளைகள், தடியடி பெற்றனர், குண்டடி பட்டனர், தண்டிக்கப்பட்டார்கள், சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால் வீரர்கள் பணியவில்லை, எதிர்ப்பு கண்டு சிரித்தனர். சிறைக்கூடங்களால் போராட்டத்தை அடக்கமுடியவில்லை, விலங்குகளால் விடுதலை எழுச்சியை தடுக்கமுடியவில்லை.

வடநாட்டு முதலாளித்துவத்துக்கு அறிகுறியாக, திராவிடத்தின் மண்ணிலே நிலவிய "டால்மியாபுரம்" என்ற பெயரை "கல்லக்குடி" என்ற அழகுதரும் தமிழ்ப்பெயராக மாற்றியமைக்கும் போராட்டத்தில் ஈடுபட்டு, ஐந்து திங்கள் கடுந்தண்டனை பெற்று, மீண்டும் வெளிவரும் கல்லக்குடிப் போராட்டத் தலைவர் கருணாநிதியையும், அவருடன் பணியாற்றிய தோழர்கள் முல்லை சத்தி, கஸ்தூரி ராஜா, குமரவேல், குழந்தைவேல் ஆகிய வீரர்களையும் வரவேற்கிறோம், வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம்.

அவர்கள் தந்துவிட்டுப்போன "கல்லக்குடி" என்ற பெயர் இன்னும் மாறாதிருக்கிறது. மாற்றியமைக்கும் துணிவு அரசாங்கத்துக்கு இல்லை. துப்பாக்கி வீரர்களும், குண்டு தோட்டாக்களும், பயங்கரச் சட்டப்பிரிவுகளும், இவற்றையெல்லாம் மக்கள்மீது பாய்ச்சிட வேண்டிய இரக்கமற்ற நெஞ்சமும், ஆச்சாரியாரிடமும், அரசாங்கத்திடமும் இருந்தபோதிலும், கல்லக்குடி பெயர் மாற்றியமைக்கப்படவில்லை. எனவே ஏற்றுக்கொண்டனர் என்றே எண்ணவேண்டும். டில்லி அதிபர் லால்பகதூர் சாஸ்திரியின் குறிப்பேட்டில் அது "டால்மியாபுரம்" என்றிருந்தபோதிலும், மக்களின் கண்ணெதிரே "கல்லக்குடி" என்ற பெயரே காட்சியளிக்கிறது.

சென்னைச் சிறையிலிருந்து அறிஞர் அண்ணா, மதியழகன், சம்பத், நெடுஞ்செழியன், நடராசன் முதலிய ஐந்து தலைவர்களும் விடுதலையடைந்துள்ளனர். அவர்களனைவரையும் வரவேற்கிறோம், வாழ்த்துகிறோம் மூன்றுமாதச் சிறைவாசத்தை ஏற்று அவர்கள் வெளிவந்தபோதிலும், ஆச்சாரியார் அரசாங்கம் அவர்களை இத்துடன் விடுவதற்கு விரும்பவில்லை. தரப்பட்ட தண்டனைகள் போதாதென்று உயர்நீதி மன்றத்தில் ஆச்சாரியார் அரசாங்கம் கொடுத்துள்ள அப்பீல் இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. எனவே, அது விசாரணைக்கு வரும்பொழுது சர்க்காரின் சட்ட நிபுணர்கள், "கழகத் தலைவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும்" என வாதிடுவார்கள். ஆச்சாரியார் அந்த முயற்சியில் வெற்றியடைந்தால், தலைவர்கள் மீண்டும் சிறைபுகலாம், ஓராண்டோ, இரண்டாண்டோ தண்டனை பெற்று. எனவே கழகத் தலைவர்கள் அடைந்துள்ள விடுதலை தற்காலிகமானதாகப் போய்விடலாம்.

கழகத் தலைவர்கள் மீண்டும் மக்களிடையே உலவுகின்றனர். அவர்களை வரவேற்கிறோம்! ஆச்சாரியாரின் முயற்சி என்னவாயினும், சட்டமன்றத்தில் கிடைத்திடும் தீர்ப்புகள் எப்படியிருந்தபோதிலும், நமது கழகத்தலைவர்களுக்கு—நமது கழகத்துக்கு மக்கள் மன்றத்தில் கிடைத்திடும் தீர்ப்பை—வரவேற்பை—வாழ்த்தை எண்ணி நாம் பெருமைப்படுகிறோம்.

வகுப்புவாதம்

மலையாளச் சீமையில் சென்றவாரம் முதன் மந்திரி ஆச்சாரியார் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். அவருடைய பயணம் ஆட்டங்கொடுக்கும் தமது மந்திரிசபைக்கு ஆள்பலம் சேர்ப்பதற்கோ, அல்லது தமிழ்நாட்டில் சென்றால்தான் தலைவலி யெடுப்பதுபோல் கருப்புக்கொடி காட்டி கண்டிக்கிறார்கள். இப்படி கேரள ராஜ்யத்துக்குச் சிறிது போய் வரலாம் என்று நினைத்தாரோ, உண்மையான காரணம் நமக்குத் தெரியாது. ஆனால் அந்த மலையாளம் சென்றும் அவருடைய கவலைகள், மனக்குறைகள், அச்சம், முதலியன தீர்ந்ததாகத் தெரியவில்லை. திராவிடரியக்கம் அவர் மனதில் மூட்டிய பயம், அங்கும் அவரை நிழல்போலத் தொடர்ந்திருக்கின்றது. தூரம் போயும் திராவிடரியக்கத்தைப் பற்றி அவரால் பேசாமலிருக்க முடியவில்லை. கோழிக்கோட்டில் பேசிய கூட்டத்தில் "திராவிடரியக்கத்தினர் தமிழ்நாட்டில் வகுப்புவாதத்தைப் பரப்புகின்றனர். அந்த வகுப்புவாதம் இங்கு பரவக்கூடாது" என்று எச்சரித்திருக்கிறார். அத்துடன் மட்டுமல்ல, மேலும் ஆச்சாரியார் ஒரு வேடிக்கை காட்டியிருக்கிறார்.

கூட்டத்தைக் கூட்டி ஜாலவித்தைக் காட்டுபவன் "எங்கே! ஒருதடவை கைதட்டுங்கள்!" என்று கேட்டுக்கொள்வதைப் போல, வலுச்சண்டைக்குப் போய், முதுகிலே நாலு அடி பலமாக வாங்கிக்கொண்டு திரும்பும் கோழை, தெருவிலே போகும் வழிப்போக்கனைக் கூப்பிட்டு, "அதோ! இருக்கிறானே, அவன் மிக அயோக்கியன்! அவனைப் பார்த்து நீ இரண்டு தடவை திட்டிவிட்டுப்போ!" என்று கேட்டுக்கொள்வதைப்போல, தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தந்த அடிகளை வாங்கிக்கொண்டு, மலையாளத்தில் போய் நின்று, "அந்த வகுப்புவாதிகளைப் பார்த்து ஒருமுறை நீங்கள் நன்றாகச் சிரியுங்கள்! நீங்கள் சிரித்ததாக அவர்களிடம் போய் நான் சொல்லுகிறேன்!" என்று கேட்டுக் கொண்டுள்ளார். அதற்குக் கூடியிருந்தவர்கள் என்ன செய்தார்கள் என்று பத்திரிக்கைகள் அறிவிக்கவில்லை. "ஏன் இப்படிக் கேட்கிறார்? வேண்டுமென்றால் அவரே சிரித்துவிட்டுப் போவதுதானே! அவருக்காக நாம் ஏன் சிரிக்கவேண்டும்! இதுவும் ஒரு அப்பாவி!" என்று அவர்கள் அவரைப்பார்த்துச் சிரித்திருக்கக்கூடும்.

ஆச்சார்யஸ்வாமிகளும், அவரைச் சேர்ந்தவர்களும் நம்மைப்பார்த்து வகுப்புவாதிகளென இன்று நேற்றல்ல, மிக நீண்டகாலமாகக் கூறிவருகின்றனர். திறமையான எதிர்வாதங்களைத் தரமுடியாத நிலையில், நம்மீது அவர்கள் வீசும் வழக்கமான குற்றச்சாட்டுகளில் அதுவும் ஒன்று.

ஆச்சாரியார் கோழிக்கோடு கூட்டத்தில் ஆரியர்—திராவிடர் வேற்றுமைகளைப் பேசுவோர் வகுப்புவாதிகளெனக் கூறினார். அந்தப் பேச்சு வெளியான பத்திரிக்கையின் மறுபக்கத்தில், திருச்சியில் கூடிய சென்னை மாகாண பிராமணர்கள் மகாநாட்டில் தலைமை வகித்த கே. எஸ். ராமசாமி சாஸ்திரியாரின் பேச்சு வந்திருக்கிறது. அவரும் "ஆரியர்—திராவிடர் வேற்றுமை பேசிடும் வகுப்புவாதிகளை அடக்கவேண்டுமென்று" பேசியிருக்கிறார். ஆச்சாரியார் முதல் மந்திரியாக, அரசியல் கூட்டத்தில் பேசியிருக்கிறார்; ராமஸ்வாமி சாஸ்திரிகள் பிராமண மகாநாட்டில் தலைவராகப் பேசியிருக்கிறார். இடத்திலும், பெயரிலும் வேறுபாடு இருந்தபோதிலும், இருவரும் ஒரே கருத்தைத்தான் பேசியிருக்கிறார்கள். ஒரே பிரம்மகுலத்தில் உதித்தவாள் அல்லவா!

சமூகத்தில் காணப்படும் சாதிபேதங்கள், வர்ணாச்சிரம முறையில் உண்டான ஏற்றத்தாழ்வுகள், இவைகளால் உயர்சாதி எனக் கூறிக்கொள்வோர் மற்றவர் உழைப்பை உறிஞ்சிடும் தன்மை, இந்த அநீதிகளைக் கண்டித்தால் அது வகுப்புவாதமெனத் தூற்றப்படுகிறது. அவ்வாறு பேசுவோர் வகுப்புவாதிகளென்று ஏசப்படுகின்றனர். வகுப்பு வாதம் பேசுவோர்,

வகுப்புவாதிகள் இரண்டுக்குமுள்ள வேற்றுமைகளை, அவர்கள் கவனிப்பதில்லை. வகுப்புவாதம் பேசுவோர் அனைவரும், வகுப்புவாதிகளாக மாட்டார்கள். வகுப்புகளின் பேரால் இழைக்கப்படும் கொடுமைகளைச் சுட்டிக்காட்டி உரிமை கேட்பவர்கள், வகுப்புகள் வேண்டுமென்று வாதிடுவோராக ஆகமாட்டார்கள்.

வகுப்புகள் பேரால் நடக்கும் அநீதியை—சுரண்டல் முறையைக் கண்டித்துப் பேசுவோர் வகுப்புவாதிகள் எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றனர். ஆச்சாரியாரும், சாஸ்திரியாரும் அப்படிப் பேசுவது கூடாது எனக் கூறுகின்றனர். வகுப்புவாதம் கூடாது என்று சொல்லுகிறார்களே யொழிய, இந்த சாதிப் பாகுபாடுகள் ஒழியவேண்டும் என்று ஒத்துக்கொள்ளுகிறார்களாவென்றால், அது கிடையாது.

ஆச்சாரியார் ஆரியர்—திராவிடர் வேற்றுமை பாராட்டுவதைக் கண்டித்துப் பேசும்பொழுது "ஆரியன் என்றால் நல்லவன் என்று பொருள். ஆகவே ஆரியர்கள் வேண்டாமென்றால், நல்லவர்களே வேண்டாமென்றல்லவா அர்த்தம்!" என்று முறையிடுகிறார். இந்தப் பேச்சின் உண்மையான நோக்கம் என்ன? ஆரியர், அவர்கள் பெயருக்கேற்ப மிக நல்லவர்கள். அவர்களுக்கு விரோதமாக எதுவும் சொல்லக் கூடாது. என்பதுதானே!

ராமஸ்வாமி சாஸ்திரியார் இன்னும் புரியும்படி. "சமூகநிலை, பண்டைக்காலத்திய நான்கு சாதிகள் அமைப்புக்கே திரும்பப் போகவேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்.

இவருடைய கருத்தும், பொதுவாக இந்த நாட்டிலுள்ள பிரம்மகுலத்தவர்களில் பெரும்பாலோரின் விருப்பமெல்லாம், "சாதி வேற்றுமைகள் இருக்கவேண்டும், ஆனால் அந்த வேற்றுமைகளைப்பற்றிப் பேசக்கூடாது; பேசுவது வகுப்புவாதம், மாபெருங் குற்றம்" என்பதாகும்.

எப்பொழுதும், உயர்வு—தாழ்வு பேதங்களில் லாபமடைகிறவர்கள், அந்த பேதத்தைக் காப்பாற்ற பாடுபடுவார்கள்; அதேசமயத்தில் அந்தப் பேதத்தைப்பற்றி மற்றவர்கள் பேசுவதை விரும்பமாட்டார்கள்.

ஏழை—பணக்காரன் என்று பிரித்துப்பேசுவதை எந்த பணக்காரனும் விரும்புவதில்லை, ஆனால் அதேசமயத்தில் ஏழை—பணக்காரன் என்ற பேதத்தைப் போக்கிவிடுவோமா என்றால் அதற்கு ஒத்துக்கொள்வதோ—பேச்சில்கூட சரியென்று சொல்வதோ கிடையாது.

ஆலையிலே அல்லற்படும் தொழிலாளி, முதலாளி—தொழிலாளி வேற்றுமையைச் சுட்டிக் காட்டிப் பேசுகிறான். ஆலை முதலாளியோ அத்தகைய வேற்றுமைப் பேச்சுகள் கூடாதென்கிறான்.

ஆண்டான்—அடிமை முறையில், அடிமைதான் அதிகம் பேசுவான். பேச முடியாவிட்டாலும் சிந்திப்பான் அந்த வேறுபாடுபற்றி ஆண்டான் கவலைப்படுவதில்லை, அவனுக்குக் கஷ்டமெதுவும் கிடையாததால்.

சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைப் பற்றி, அந்த நிலைகளினால் பாதிக்கப்பட்டவர்கள்தான் பேசுவார்கள். ஆண்டை—அடிமை, பணக்காரன்—ஏழை, முதலாளி—தொழிலாளி, உயர்ஜாதி—தாழ்ந்தசாதி, ஆரியன்—திராவிடன், இந்தப் பிரச்னைகளையெல்லாம், அந்த முறைகளினால் லாபமடைந்தவர்கள், உழைக்காது வாழும் வகைபெற்றவர்கள், பேசுவதில்லை; பேசுவதற்கு அவசியம் கிடையாது, பேசுவதினால் நஷ்டம்தான், எனவேதான் அவர்கள் இந்தப் பிரச்னைகளைப் பேசுவது கூடாது என்று கூறுகின்றனர். அதனால் ஆச்சாரியாரும், ராமஸ்வாமி சாஸ்திரியாரும், ஆரியர்—திராவிடர், பிரச்சினை பேசுவது கூடாது. அது வகுப்புவாதம், என்று கூச்சலிடுகின்றனர்.

வகுப்புவாதம்! அதைப்பற்றி யாரும் பேசத் தேவையில்லை. வகுப்புவாதம், பேசுவதால் வரவில்லை, அது சமூகத்திலே இருக்கிறது. நாட்டிலே, நகர்களிலே, சிற்றூர்களிலே, சேரிப்புறங்களிலே, அது காணப்படுகிறது. நூற்றுக்கு மூன்று பேராக உள்ள ஒரு சமூகத்தினர் மட்டும், நூற்றுக்கு எண்பது தொண்ணூறு என்று கல்வியில் தேர்ச்சிபெற்றிருக்க, 100-க்கு 97 பேராக உள்ள பெருங்குடி மக்களிடையே நூற்றுக்கு பத்து, பன்னிரண்டு என்று மட்டும் கல்வி பெற்றோர் விகிதம் இருக்கிறதே, அங்கே வகுப்புவாதமில்லையா?

உழைத்துப் பாடுபடுபவன் ஊர் மூலையில், தாழ்ந்தவனாக, தீண்டப்படாதவனாக, சேரிப்

புறங்களில் சிறு குடிசைகளில் அவதிப்பட; விதைக்காது அறுத்து, உழைக்காது உண்டு வாழும் கூட்டம் மட்டும் தனியாகத் தெருக்கள் அமைத்துக்கொண்டு, வாழ்க்கை வசதிகளுடன் களித்திருக்கிறார்களே, அங்கே வகுப்பு வாதம் காணப்படவில்லையா?

கல் உடைக்க, புல் எடுக்க, கைவண்டி இழுக்க, கனமூட்டைகள் சுமக்க, கடும் வெய்யிலில் விறகு உடைக்க, வெந்து விழும் தீயிலே இரும்பைப் பிடிக்க, ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் வாடிட-வதைபட, மற்றொரு இனத்தினர் மட்டும் கல்வி யறிவு பெற்று, வாடாது வாழும் வகை யறிந்து, கல்லூர்களோ கச்சேரிகளோ, அரசாங்கபதவிகளோ, எங்கும் நிறை பிம்பங்களாக இருக்கிறார்களே, அதில் வகுப்புவாதமில்லையா ?

“ஒவ்வொருவரும் அவரவர் குலத்தொழிலைச் செய்யவேண்டும், அதற்காகக் கல்விமுறையும் இருக்கவேண்டுமென” கல்வி யமைப்பினுள் வர்ணாச்சிரமத் திட்டத்தைப் புகுத்த விரும்பினாரே அன்பர் ஆச்சாரியார், அந்த விருப்பத்தில் வகுப்புவாதமில்லையா ?

வகுப்புவாதம் கூடாது என்றுமட்டும் கொக்கரிக்கிறார்களே! வகுப்புவாதம் எங்கே யில்லாமற்போயிற்று? அவர்களுடைய உருவத்தில், பேச்சில், உடையில், பெயரில், எழுத்தில், எண்ணத்தில், வாழும் வகையில், கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்களில், எல்லாவிதத்திலும் உயர்ந்தஜாதி—ஆரியர்—பார்ப்பனர் என்பதை வெளிப்படுத்தும்படியாகத்தானே இருக்கிறது! ஆச்சாரியார் சாஸ்திரிகள், சர்மாக்கள், ஐயர் ஐயங்கார் என்ற பெயர்கள் மறக்கப்பட்டனவா? மேனியில் ஊசலாடும் முப்புரி நூல்கள் எடுக்கப்பட்டனவா? இந்த நாட்டுக்குப் புறம்பான வேதகோஷம் நிறுத்தப்பட்டதா? “நம்மவாள்” என்று தங்களுக்குள் பாராட்டிக் கொள்ளும் உரிமைகள் விடப்பட்டனவா? கிடையாதே!

ஆச்சாரியாரும் சாஸ்ரிகளும், வகுப்புவாதம் கூடாது என்றுதான் பேசுவார்கள். ஆனால் அதே சமயத்தில் வகுப்புகள் ஒழிந்துபோக வேண்டுமென்றால் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். வகுப்பு வேற்றுமைகள் காப்பாற்றப்பட வேண்டியவைகள் என்று பாடுபடுவார்கள். அவர்கள் வகுப்புவாதம் பேசுவதில்லை, ஆனால் முதல்தர வகுப்புவாதிகளாக அவர்கள் விளங்குகின்றனர்.

ஆச்சாரியாரின் கடவுள்

பக்தி முறையில் ஈடுபட்டோர், கடவுளைப் பலவிதமாக நினைத்துப் பாடியுள்ளார்கள்; சிலர் கடவுளைத் தாயாகவும், சிலர் தந்தையாகவும் பாவித்தனர். ஆண்டாள் போன்றவர்கள் கடவுளைத் தம் காதலனாக வைத்து, பக்தியும் காதலும் ஒன்றுபட பாடல்களை இயற்றினார்கள். ஆழ்வாராதிகள் தமது பெருமாளை, சிறு குழந்தைப்பருவத்திலிருந்து ஒவ்வொரு பருவமாக வைத்துப் பாடிய பாடல்கள் உள்ளன. அதாவது பக்திமான்களின் கற்பனையில் கடவுள் அம்மையாக, அப்பனாக, காதலனாக, காதலியாக, குழந்தையாக, நண்பனாக பல உறவு முறைகளில் வர்ணிக்கப்படுகிறார்.

இந்தக்காலத்து முதல்தர பக்திமானான ஆச்சாரியார்—அவர் தம்மைப்பற்றி அப்படித்தான் எண்ணிக்கொண்டிருக்கிறார்-அவர், கடவுளைப் பற்றி பாடும் பக்தி நாமாவளியில் ஒரு புதிய சொல்லை—புதிய பெயரைச் சேர்த்திருக்கிறார். கோழிக்கோடு கூட்டத்தில் கடவுளைப்பற்றிக் கூறும்பொழுது, “கடவுள் ஒரு இன்ஸ்பெக்டர் ஜெனரல்” என்று அறிவித்துள்ளார்.

பக்தி நாமாவளியில் பெயர்கள் தரும் பொழுது சில முறைகளை வைத்துக்கொண்டு தருவார்கள். சிறு குழந்தைக்கு ஆதரவாயிருக்கும் தாயைப்போல, தந்தையைப்போல, தமக்கும் கடவுள் ஆதரவாயிருக்கவேண்டுமென்று “அம்மையே! அப்பனே!” என்று பாடினார்கள். இந்த உலகில் அன்பால், ஆதரவால், மிகவும் உயர்த்திச் சொல்லப்படும் உறவுமுறைகள் பக்திமான்களின் கற்பனையில் கடவுளுக்கும் உண்டாக்கித்தரப்பட்டன. அதனால் கடவுளை “அம்மையே! அப்பனே!” என்று வேண்டினார்கள். ஆனால் இன்று ஆச்சாரியார் கடவுளை ஒரு இன்ஸ்பெக்டர் ஜெனரலாக ஆக்கிவிட்டார்! காரணம் என்னவோ தெரியவில்லை. இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்றால் ஆச்சாரியாருக்கு மிக ஆதரவளிக்கும், அன்பு பாராட்டும், அபயமளிக்கும் இடமாகத் தோன்றுகிறது போலும்!

எது எப்படி யிருந்தாலும், ஆச்சாரியாருக்கு கடவுள் ஒரு இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருக்கிறார்; இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒரு கடவுளாக இருக்கிறார்!

அரசாங்கம்பற்றி !

தங்களுக்கு இன்னல் விளைக்கும் அரசாங்கத்தை மாற்றியமைக்கும் உரிமை மக்களுக்கு இருக்கவேண்டும். மக்களின் பிரதிநிதிகள் கூறுவது நீரோ போன்ற மன்னனுக்குப் பிடித்தமில்லாமலிருக்கலாம், ஆனால் மக்களுக்கு நன்மையாக இருக்கும். மக்களின் உரிமைகள் அலட்சியப்படுத்தப்பட்டால்—மறுக்கப்பட்டால், நீரோ போன்ற எதேச்சாதிகாரிகளின் கொடுங்கோன்மை அளவுகடந்து போய்விடும். ஒரு தனிப்பட்ட மனிதனுடைய பெருமைக்காக, அனுகூலத்துக்காக, மனமகிழ்ச்சிக்காக ஒரு அரசாங்கம் நடத்தப்படுகிறதென்றால், அந்த அரசாங்கத்தை அல்லது அரசியல் அமைப்பையே மாற்றியமைப்பது முக்கிய வேலையாகும்; இதனால் ஆள்பவருக்கு சங்கடங்கள் உண்டாகிறதென்றாலும், அதைப் பொருட்படுத்தக் கூடாது.

"உண்டாக்குகிற உரிமையுள்ளவனுக்கு, அதை நீக்குகிற உரிமையும் இருக்கவேண்டும்" என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். அதிலும் அரசாங்கம் மனிதனால் உண்டாக்கப்படுவது மட்டுமல்ல, மனிதனுக்காக உண்டாக்கப்படுவது; எனவே மக்களின் விருப்பத்தினால் ஒரு அரசாங்கம் அமைகிறதென்றால், மக்களின் விருப்பத்துக்கு அது மாறுபடுகிறபொழுது அது விலகவேண்டும் அல்லது விலக்கப்படவேண்டும் இத்தகைய மாறுதல்களினால், சமூகத்தின் அமைதி கெட்டுவிடுமென்று சிலர் சொல்வார்கள். ஆனால் அவர்கள் ஒன்றை நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும்; மக்களின் நலத்துக்கு உண்டாக்கப்பட்ட அரசாங்க அமைப்பு, மக்களுக்குத் தீங்கு தரும் கருவியாக மாறிவிட்டால், நீதி தவறிவிடுகிறது. **நீதி தவறிய இடத்தில், அனுமதிக்கு இடமில்லை.**

—ஆல்கெர்னன் சிட்னி
"அரசாங்கம்பற்றிய குறிப்புகள்" என்றநூலில்.

★

ஆளுகிற உரிமை மக்களிடமிருந்து பெறப்படுகிறது. ஆள்பவர்கள் தங்கள் கடமையை மறந்து, எதேச்சாதிகார முறையில் நடந்தால், அந்த ஆளுகிற உரிமையை இழந்துவிடுகிறார்கள். அப்படி அவர்களிடமிருந்து அகன்ற உரிமை மீண்டும் மக்களை வந்தடைகிறது. பிறகு மக்களே அரசாங்கத்தைப் புதுப்பிக்கவும், சட்ட திட்டங்களை நிர்ணயிக்கவும் ஆன பெரியதொரு சட்டசபையாக ஆகிவிடுகிறார்கள்.

—ஜான் லாக்
"அரசாங்கத்தின் குறிக்கோள்"

●

வரலாற்றில் மிகப்பெரும் கொடுங்கோலர்களாக விளங்கியவர்களெல்லாம், முதலில் மிக நல்ல முறையில்தான் ஆள ஆரம்பித்திருக்கின்றனர், ஆனால் அதிகாரத்தின் அளவு, அவர்களின் இதயத்தையும் அறிவையும் கெடுத்துவிடுகிறது.

—எட்மண்ட் பர்க்

பண்டைக்காலப் போர்க்கருவிகள்

தமிழகம் சீரும் சிறப்பும் பெற்றிருந்த பண்டைக்காலத்தில், அதன் வீரம் எத்திசையிலும் வெற்றியைத் தந்துகொண்டிருந்தது. தமிழரின் வீரம் ஈழத்திலிருந்து இமயம்வரையில் பரவியிருந்தது. கரிகால்வளவன் ஈழத்திலிருந்து இமயமலைவரையில் வென்று, தன் வீரத்தின் சிறப்பாகவும், வெற்றியின் அறிகுறியாகவும் இருக்கும் வண்ணம், இமயமலையில் புலிக்கொடியைப் பொறித்துவந்தான். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற சேரமன்னன், இமயத்தில் விற்கொடியைப் பொறித்து மீண்டான். அவன் மகன் சேரன் செங்குட்டுவன், கங்கைக்கரையிலே கனகவிசயரைத் தோற்கடித்து, இமயம் சென்று, கண்ணகி உருவத்திற்குக் கல்லெடுத்துவந்தான். ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன் என்ற பாண்டிய மன்னனும், எதிர்த்து நின்ற ஆரியப் படைகளை வென்று, இமயத்தில் மீன்கொடியைப் பொறித்துவிட்டு, வெற்றிவாகையோடு திரும்பினான்.

இவர்கள் எல்லோரும் தம் தோள்வலியைத், துணைவலியை நம்பிச் சென்றார்களேயொழிய, ஆண்டவனிடம் வரங்கேட்டு, வரத்தைப் பெற்றுக் சென்றவர்களல்லர். வாயுவாஸ்திரம், வருணாஸ்திரம், அக்கினியாஸ்திரம் போன்ற அஸ்திரங்களை, யாகங்கள் செய்து பெறுவது என்ற கற்பனைக் கதைகளை நம்பிக் காலந்தள்ளியவர்களல்லர்; அத்தகைய கற்பனைக் கதைகள் நாட்டில் வளரத் தமிழ்ப்புலவர்கள் பாடியதுமில்லை; தமிழரசர்கள் அவற்றிற்கு ஆதரவு அளித்ததுமில்லை. அத்தகைய கற்பனைக் கதைகளைக் கட்டிவிட்டவர்களும், அவற்றிற்கு ஆதரவு அளித்துப் போற்றிக் காப்பாற்றி, உண்மை என நம்பி வாழ்ந்தவர்கள் ஆரிய அரசர்களேயாவர். பண்டைத் தமிழிலக்கியங்களில், வரங்கேட்டு வாங்கும் கற்பனைகள் ஒன்றிரண்டு காணப்பட்டாலும், அவை தமிழ்ப் புலவர்களின் உள்ளத்தில் உதித்த கற்பனைகள் அல்ல; ஆரியக் கதைகளால் நுழைந்தவைகளேயாகும்.

பண்டைக்காலத் தமிழ் வேந்தர்கள் மனித முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்ட முறைகளையும், வசதிகளையும், கருவிகளையும் கொண்டு போரிட்டு வந்தார்களேயொழிய, கடவுளின் வரப்பிரசாதத்தை நம்பி, எந்தப் போரையும் நடத்தியதாகத் தெரியவில்லை.

தமிழர்கள் பறக்கும் மாடு, மறையும் குதிரை, வெட்ட வெட்ட வளரும் யானை, கொல்லக் கொல்ல உயிர்ப் பெற்றெழும் வீரர்கள், வாயுவாஸ்திரம் வருணாஸ்திரம், அக்கினியாஸ்திரம் போன்ற அஸ்திரங்கள், மலை, மரம், மேடு, பள்ளம், தண்ணீர், ஆறு, கடல் ஆகியவற்றையெல்லாம் அழித்துச் சுற்றிக்கொண்டு வந்து அம்புறுத்தூணியில் புகுந்துகொள்ளும் அம்புகள், ஒன்று பத்து நூறு ஆயிரங் கோடியாக விரிந்து எழும் பாணம் முதலிய கற்பனைக் கருவிகள் தமிழர் நாகரிகத்திலே இடம்பெற்றதில்லை.

தமிழர்கள், தேர், யானை, குதிரை, காலாள் முதலிய நால்வகைப் படைகளைக்கொண்டுதான் போரிட்டுவந்தனர். கடலரண், காட்டரண் நீரரண், மலையரண், மதிலரண் போன்ற பல பாதுகாப்புகளைக் கொண்டிருந்தனர். பண்டைக்காலத் தமிழர்கள் கையாண்ட போர்க்கருவிகளின் பெயர்களைக் கேட்டால், அவர்களின் அறிவின் தெளிவும், ஆற்றலின் விளைவும் புலப்படும். அவைபற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் ஆங்காங்குச் சிதறிக்கிடக்கின்றன.

அவர்கள் கையாண்ட போர்க்கருவிகளில் வளைவிற்பொறி என்பது ஒன்று. இதில் அம்புகளைக் கோர்த்துவிட்டால் இது தானே வளைந்து, அம்புகளை மிக விசையுடன் எதிரிக

ளின் மேற் செலுத்தும். கருவிரலூகம் என்ற பொறி, இது குரங்குபோலிருந்து, இதனிடம் நெருங்குபவர்களைப் பிடித்து, இறுக்கிக் கொன்றுபோடும். கல்லுமிழ்கவண் என்பது உருண்டைவடிவான கருங் கற்களை எதிரிப் படையினர்மீது மிக விசைவாக எறியப் பயன் படுத்துவது. கல்லிடுகூடை, இடங்கணி என்னும் பொறியில் பொருத்தி எறிவதற்கான கற்களைக் குவித்து வைத்துக்கொண்டிருக்கும் கூடையாகும். இடங்கணி என்பது கற்களைப் பெருவாரியாகத் தூக்கிச் சிதறி வீசும் பொறியாகும். தூண்டில் என்பது மதிலின்மேல் ஏற முயலுபவர்களைச் சிக்கவைப்பதற்காக அகழியிலே மிதக்க விடப்படும் ஒரு பொறி; அதில் யாரேனும் அகப்பட்டுக்கொண்டால், அவர்களை அப்படியே மதிலுக்கு மேலே அத் தூண்டிலின் உதவியால் இழுத்துக் கொன்றுபோடுவார்கள். தொடக்கு என்பது மாற்றாரின் கழுத்தில் வீசி இழுக்கும் இருப்புச் சங்கிலி. ஆண்டலையடுப்பு என்பது சேவல் வடிவாகச் செய்யப்பட்டிருக்கும், அதனை மேலே பறக்கவிட்டு மாற்றாரின் தலையில் மோதவிடுவார்கள்; அது யார் தலையிலேனும் மாட்டிக்கொண்டால், அவர்கள் உச்சியைக் கடித்து, தலையோடு பிடுங்கிவிடும். கவை என்பது அகழியை விட்டுக் கரை ஏற முயலுபவர்களை மீண்டும் அகழியிலேயே தள்ளுவதற்குப் பயன்படுத்தும் கருவி. கழு புதை என்பன அம்புகளைச் சேர்த்து வைத்துக்கொள்வதற்கான அம்புக் கட்டுகளாகும். ஐயவித்துலாம் என்பது கோட்டைக்கதவுகளின் முன்னால் வைக்கப்பட்டுக், கோட்டைக் கதவுகளைப் பகைவர் நெருங்காவண்ணம் அம்புகளை அவர்கள் மேல் தூவுவதற்காகப் பயன்படுத்தும் பொறி. கைப்பெயர் ஊசி என்பது மதிலின் மீது ஏறி, மதிலின் தலையைக் கைகளால் பற்றும்போது, அப்படி பற்றுதவாறு கைகளை நோக்கிக் குத்தும் இருப்பு ஊசியாகும். எரிசிரல் என்பது மீன்கொத்திப் பறவை போன்று அமைந்து, மாற்றாரின் கண்களைக் கொத்துவதற்காகப் பயன்படுத்தும் கருவி. பன்றி என்பது மதிலின்மேரில் ஏறிவந்தவரைக் கிழித்துப் போடுவதற்கான, கொம்புடைய பன்றியின் உருவம்போல் அமைந்த இருப்புப்பொறி. பனை என்பது மூங்கில் போன்று இரும்புக்கம்பி பொருத்தப்பட்டு, பகைவர்களை விடாமல் அடிப்பதற்குப் பயன்படுத்தும் கருவி. இவையேயன்றி வீரர்கள் ஏந்தியிருந்த கருவிகளும், பயன்படுத்திய பொறிகளும் பலப்பல. வில், அம்பு, எழு, சீப்பு, கணையம், கோல், குந்தம், வேல், சதக்கனி, தள்ளிவெட்டி, களிற்றுப் பொறி, விழுங்கும் பாம்பு, கழுகுப்பொறி, புலிப் பொறி, குடப்பாம்பு, சகடப்பொறி, தகர்ப்பொறி, அரிநூற்பொறி, குருவித்தலை, பிண்டிபாலம் சூலம், மழு, வாள், கவசம், தோமரம், கதை, தண்டம், நாராசம், இருப்பு முள், கழுமுள் கூன்வாள், சிறுவாள், கோடுவாள், அரிவாள், ஈர்வாள், உடைவாள், கைவாள், கணையம், சுழல்படை, கோடாலி, தோட்டி, வேல், வச்சிரம், குறுந்தடி, ஈட்டி, கவண், சிறுசவளம், பெருஞ்சவளம், சக்கரம், கன்னம், உளி, பாசம், தாமணி, சாலம், ஊசி, முசுண்டி, முசலம், அள், பலகை முதலியன அவைகளின் குறிப்பிடத் தக்கவையாகும்.

தமிழர்கள் நடத்திய பெரும்போர்களை விரித்துக்கூறும் நூல்கள் பல சங்ககாலத்தில் இருந்தன. அவைகளில் மிக முக்கியமானவை, சேர மன்னர்களின் போர்ச் சிறப்புகளைக் கூறும் பதிற்றுப்பத்து. சேர அரசன் ஒருவனின் படையெழுச்சியைக் கூறும் செங்கோன் தரைச்செலவு பெருஞ்சேரலிரும்பொறை என்பவனின் படையெடுப்பைக் கூறும் தகடூர்யாத்திரை, பொதுவாகத் தமிழரின் வீரத்தை விளக்கிடும் புறநானூறு, செங்குட்டுவனின் வடநாட்டுப் படையெடுப்பைக் கூறும் சிலப்பதிகாரம் முதலியன முக்கியமான நூல்களாகும்.

தமிழ் வீரர்களின் சிறப்பையும் வீரத்தையும் தந்த நூல்களை புராண இதிகாசங்கள் மறைத்துவிட்டன என்பதை அறியும்போதும், மேலே சொல்லப்பட்ட கருவிகளையெல்லாம், வஞ்சகத்தால் தர்ப்பை பணியவைத்துவிட்டது என்பதைப் படிக்கும்போதும், உண்மையான தமிழ் உள்ளம் படைத்தோருக்கு முதலில் எக்கம் பிறக்காமலிருப்பதில்லை; பின்னர் எழுச்சி ஏற்படாமலிருப்பதில்லை!

தந்திரம்

போர்முகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த அரபுநாட்டுப் படைத்தலைவன் ஒருவனுக்கு குதிரையொன்று தேவைப்பட்டது. தங்கியிருந்த கிராமத்திலிருப்பவர்களிடம் குதிரையை வாங்கும்படி சொன்னான். அவனைச் சேர்ந்தவர்கள் அந்தக் கிராமத்திலிருக்கும் குதிரைகளையெல்லாம் பார்த்து, கடைசியாக இரண்டு குதிரைகளைப் பிடித்து வந்தார்கள். குதிரையின் சொந்தக்காரர்கள் இருவருக்கும் குதிரைகளைக் கொடுக்க மனமில்லை. எனவே, "அது கொஞ்சம் கால் நொண்டி", "ஓடினால் இரைப்புக் கட்டும்", "இது படைத்தலைவருக்கு ஏற்றதல்ல" என்று இரண்டுபேரும், தம்தம் குதிரைகளைப் பற்றிக் குறைவாகச் சொல்லிக்கொண்டார்கள். இரண்டு குதிரைகளில் எது நல்ல குதிரையென்று கண்டுபிடிக்க முடியவில்லை.

கடைசியாகப் படைத்தலைவன் அவர்களைப் பார்த்து "உங்கள் குதிரைகளை ஓட்டிக்கொண்டு பந்தயமாக வாருங்கள். எந்தக் குதிரை முன் வருகிறதோ அதை நான் எடுத்துக்கொள்ளுகிறேன்" என்று சொன்னான். இருவரும் உடனே ஒத்துக்கொண்டார்கள்.

பந்தயத்தில் முதலில் வந்தால் குதிரையை இழக்கவேண்டியிருக்குமாதலால், அவர்கள் மெதுவாக வருவதற்கே முயற்சிப்பார்கள் என்பதைக் கண்டுகொண்ட படைவீரர்களில் ஒருவன் படைத்தலைவனிடம் போய் அந்தப் பந்தயத்தில் உண்டாகும் தவறைச் சொன்னான். "தலைவரே! நீங்கள் சொல்லுகிறபடி பந்தயம் விட்டால் தோற்றுப்போகவே, ஒவ்வொருவரும் முயற்சிப்பார்கள். அதனால் சிறந்த குதிரை எதுவென்று பொறுக்கமுடியாது."

"அப்படியொன்று நடக்காது, நான் விடப்போகிற பந்தயத்தில் ஒருவர் குதிரையை வாங்கி இன்னொருவரிடம் கொடுத்து ஓட்டச் சொல்லப்போகிறேன்!" என்று படைத்தலைவன் பதிலளித்தான்.

●●●

யார் எழுப்புவது?

பாகவதர் மிக அருமையான கதா காலட்சேபம் ஒன்றை நடத்திக்கொண்டிருந்தார். ஆனால் கூடியிருந்த மக்களோ அந்த காலட்சேபத்தில் அதிகம் ஈடுபட்டிருந்ததாகக் காணப்படவில்லை. அந்த பகவத் கதையில் உருக்கமான கட்டங்கள் வந்தபோதும், பல அரிய விஷயங்களை அவர் சொன்னபோதும் கொஞ்சங்கூட ரசிக்காமல், கூட்டம் பேசாமல் இருந்தது. தனது காலட்சேபத்தைக் கொஞ்சம் நிறுத்திவிட்டு, பாகவதர் மூக்குக் கண்ணாடியைத் தளர்த்திக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார். முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த ஒருவர் சாய்ந்து தூங்கியபடி, பலமாகக் குறட்டைவிடுவதைப் பார்த்தார். பாகவதருக்கு அடங்காத கோபம் உண்டாயிற்று. தூங்குபவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சிறுவனைப் பார்த்து, "ஏண்டா, தம்பி! சபையில் உங்க மாமா இப்படிக் குறட்டை விடுகிறாரே! எழுப்பி உட்காரவைக்கக் கூடாதோ?" என்று கடிந்துகொண்டார்.

அதற்குப் பையன், "நீங்கள்தானே அவரைத் தூங்கவைத்தீர்கள், ஆதலால் நீங்கள்தான் அவரை எழுப்பவேண்டும்" என்றான்.

ஜியார்டனோ புருனோ

(முன் இதழ் தொடர்ச்சி)

ஆன்செல்ம் பாதிரியார் மேலும் தொடர்ந்தார். அவர் குரல் நடுங்கியது. "நேப்பிள்ஸிலுள்ள தலைமையிடத்துக்குத் தூதுவன் ஒருவன் போயுள்ளான். மதவிரோதக் குற்றம் கண்டுபிடிக்கும் அலுவலாளர் நாளை இங்கு வந்து...."

ஒளி வீசிக்கொண்டிருந்த புருனோவின் முகம் மங்கியது. பாதிரியாரின் தோளில் தன் கையை மெல்லவைத்து, "ஐயா! நான் என்னசெய்ய வேண்டும் என்று சொல்லுகிறீர்கள்? மத விசாரணைக்குழுவின் கொடுமைகளிலிருந்து தப்ப என்னைப் பொய் சொல்லவைக்க மாட்டீர்களல்லவா?"

"ஓடிப்போய்விடு! ஓடிப்போய்விடு! இன்னும போதுமான நேரம் இருப்பதால் ஓடிப் போய்விடு! ஓ, என் அருமை மகனே! சித்ரவதை மரத்தில் கட்டிவைத்து, உன்னுடைய எலும்புகள் நொறுக்கப்படுவதையும், உன்னுடைய இளமை ததும்புப் முகம் வலிதாங்காமல் கோணுவதையும் என்னால் பொறுத்துக் கொண்டு பார்க்க இயலாது. ஓ! நான் அதைப் பார்த்திருக்கிறேன்! பலமுறை பார்த்திருக்கிறேன்" என்று மெல்லிய குரலில் பேசி, மேல்பேச நா எழாமல் அப்படியே அசைவற்று இருந்துவிட்டார் ஆன்செல்ம் பாதிரியார். திராட்சைக் கொல்லையை நோக்கி யாரோ வருபவரின் காலடியோசையைக் கேட்டவுடன் அவர் வாரிச் சுருட்டி எழுந்து, விரைவாகப் போய்விட்டார்.

ஜியார்டர்னோ புருனோ, கடலைநோக்கிப் பார்வையைச் செலுத்தியவண்ணம், மேற்கொண்டு ஒருமணிநேரம் அங்கேயே தங்கியிருந்தான். அவனுடைய இதயம் துடிதுடித்துக்கொண்டிருந்தது. எப்படி விரைவாகத் தப்பிப் போகலாம் என்பதுபற்றிய ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். திடீரென்று அவனுடைய முகம் ஒளிபெற்றது; புன்சிரிப்பு அவனுடைய உதடுகளிலே பூத்தது. உடனே எழுந்து நின்றான். "பாதிரிமார்களே! நான் 'நோவாவின் படகை' விட்டு அகல்கிறேன்; ஏனென்றால், அது இனி எனக்குப் பாதுகாப்புத்தரும் படகாக இல்லை!" என்று கூறிக்கொண்டே தன் அறையை நோக்கி நடந்தான்.

இரவில் எல்லோரும் உறங்கிக்கொண்டிருந்த பொழுது, ஜியார்டனோ மெல்ல எழுந்தான். தன் இடுப்பில் அங்கியின்மேல் சுற்றியிருந்த கறுப்புத் துணிப்பட்டையை அவிழ்த்தான். அதன் ஒரு முனையை சாளரத்தின் சட்டம் ஒன்றில் முடிந்துவிட்டு, அதனைப் பிடித்துக் கொண்டே சாளரத்தின் சிறுவழியாக வெளியேறி, மெல்ல ஓசையெழுப்பாமல் தரையை நோக்கி இறங்கினான். பிறகு வடக்குநோக்கி விறுவிறு என்று விரைந்து சென்றான், விடுதியின் கட்டுப்பாடுகளிலிருந்தும், தண்டனையின் கொடுமைகளினின்றும் விடுபட்டோம் என்ற விடுதலையுணர்ச்சியுடன் எங்கே போகிறோம் என்று தெரியாமல் போய்க்கொண்டே இருந்தான்.

மறுநாள், நேப்பிள்ஸிலுள்ள தலைமை மடத்தின் மண்டபத்தில் கூடும் மதவிசாரணைக் குழுவின்முன் கொண்டுபோய் நிறுத்துவதற்காக, ஜியார்டனோவைப் பிடிக்க, ஏவலாளர்கள் வந்தார்கள். ஜியார்டனோவின் அறைக்குச் சென்றார்கள். அறை வெற்றிடமாகக் காட்சியளித்தது. ஜியார்டனோ தப்பி ஓடிவிட்டான் என்பதை அறிந்துகொண்டார்கள். என்றாலும் மதவிசாரணைக் குழுவினர் அவனை வாளா விட்டுவிடவில்லை. அவனைக் கிருஸ்துமதத்தை விட்டு விலக்கி, அவனுடைய உடலையும், உயிரையும் பேய் பிடித்துக்கொள்வதாக என்று சாபமிடவும் செய்தார்கள். ஜியார்டனோவோ

உறுதியுடனும் உணர்ச்சியுடனும் அபினன் மலைகளை நோக்கி நடந்தவண்ணமிருந்தான்.

புரூனோ கால்நடையாகவே நடந்துசென்றான். ஆங்காங்கு கிடைக்கும் வழிப்போக்கு வண்டிகளில் ஏறிச் சென்றும் நெடுந்தொலைவு கடந்தான். இறுதியாக நகரம் ஒன்று அவன் கண் முன் எதிர்ப்பட்டது. அப்பொழுதே நகருக்குள் நுழைந்தால், பலர் தன்னை யார் என்று கேள்விகேட்க இடமேற்படும் என்று கருதி, பொழுது சாயும்காலம்வரையில் நகருக்கு வெளியே தங்கியிருந்து, இருட்டினதும் நகருக்குள் நுழைந்தான். ஏதோ குற்றம் செய்துவிட்டவன்போலவும், நீதிக்குப் பயந்து ஓடுபவன் போலவும், ஒளிந்து ஒளிந்து, யார் கண்ணிலும் படாவண்ணம் போய்க்கொண்டேயிருந்தான்.

அந்தக்காலம் மதமூடநம்பிக்கை பெரும்பாலான இடங்களில் செங்கோலோச்சிய காலமாகும். குருமார்களுக்குப் படிந்து நடந்து, கோயிலுக்கு இடைவிடாமல் சென்றுவருபவர்கள், எவ்வளவு பெரிய குற்றமிழைத்த குற்றவாளிகளாக இருந்தபோதிலும், அவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவதில்லை ; நாணயமானவர்களாகவே கருதப்பட்டனர். அந்தச் செயல்களைச் செய்யாதவர்கள், எவ்வளவு நாணயமாக நடந்தபோதிலும், அவர்கள் குற்றவாளிகளாகவேக் கருதப்பட்டனர். விடுதலை வேட்கையுணர்வு வெற்றிபெற்று, கிருத்தவமதம் மென்மையானதாகவும், பரந்த நோக்கமுடையதாகவும் ஆக்கப்படும் காலம் வரையில், கிருத்தவ நாடுகளில், மதமாறுபாடுடையவர்களாக வாழ்வதைக் காட்டிலும், கொலைகாரர்களாகவும், திருடர்களாகவும் வாழ்வது எவ்வளவோ பாதுகாப்பான வாழ்வாகும். திருடனும் கொலைகாரனும், பொன்னையும், புகழ்பாடுதலையும் செலுத்தி மன்னிப்பையும் பாதுகாப்பையும் எளிதில் பெற்றுவிடலாம் குருமார்களிடமிருந்து. ஆனால், மதக்கருத்தில் மாறுபட்டவன், தூயவாழ்வையும், நாணயமான பேச்சையும் கொண்டிருந்தாலும், அவனுக்கு அளிக்கப்பட்ட பரிசுகள் சிரம்வெட்டுக்களமும், சித்ரவதை மரமுமேயாகும்.

இறுதியாக புரூனோ, இத்தாலியையும் சுவிட்ஜர்லாந்தையும் இடையே நின்று பிரித்துக் காட்டும் மலைகளின் வெள்ளிய முகடுகளைக் கண்டான். அந்த நாட்களில் சுவிட்ஜர்லாந்து கத்தோலிக்க போப்பின் ஆதிக்கத்துக்கு அடங்க மறுத்து, பிராட்டெஸ்டண்ட் மதத்தைப் பெரும்வகையில் தழுவிநின்றது. அங்கு பிராட்டெஸ்டண்ட் சீர்திருத்தக்காரர்களுக்கு மதிப்பும், பாதுகாப்பும் அளிக்கப்பட்டிருந்தன. மலையைத் தாண்டி அப்பால் சென்றால், தான் உரிமையோடு உலாவலாம், மதவிசாரணைக் குழுவின் கொடிய பிடி தன்னைத் தாக்காது என்று புரூனோ கருதினான். அறிவியல் வளர்ச்சியைத் தடுப்பதும், பகுத்தறிவு முயற்சியை ஒடுக்குவதும் கிருத்தவ மதத்தின் எல்லாப் பிரிவுகளுக்குமே உகந்ததொரு கொள்கை என்பதை ஜியார்டனோ அதுவரையில் அறியாமலேயிருந்தான். கண்குருடானவன் பார்க்கிறான் என்பது எவ்வளவு அருமையானதோ, அவ்வளவு அருமைவாய்ந்ததாகும் பகுத்தறிவுவாதியின் கருத்துக்களைக் கிருத்தவன் மதிப்பது என்பதும்.

புரூனோ செயின்ட் பெர்னார்டு என்ற மலை மீது ஏறி அதன் உச்சியை அடைந்தான். அப்பொழுது கதிரவனும் மேற்றிசையில் மறையும் நிலையில் இருந்தான். அங்கு நின்று, மாலை வெய்யலில், தன் தாயகமான இத்தாலியை ஒருமுறை திரும்பிப்பார்த்தான். வெட்டவெளியும், நிலபுலங்களும் பளபளப்பான இனிய காட்சியைத் தந்தன. தாயகத்தை விட்டு அகல்கிறோமே என்ற எண்ணம், அவன் கண்களில் தாரை தாரையாக நீர்த்துளிகளை வருவித்தது. "ஓ! இத்தாலி! இத்தாலி! என் அன்பு நாடே! என் அழகு நாடே!! கிருத்தவத்தால், மனிதர்களிலிருந்து பேய்களாக மாற்றப்பட்டிருக்கும் குருமார்களை விட்டு நான் ஓடிப்போகிறேன், நான் உன்னிடம் திரும்பி வருவேனா? உன்னிடத்தில் வாழ்வேனா? எனக்கு இடம் அளிப்பாயா? பாதுகாப்புத் தருவாயா? அல்லது எனக்கு கல்லறை மட்டுமே வைத்திருப்பாயா?" என்று புரூனோ அவனை அறியாமலே கதறிவிட்டான்.

பிறகு அங்கிருந்து திரும்பி வடக்கு நோக்கிச் செல்லும் வழியில் இறங்கிப் போய்க்கொண்டே இருந்தான். அது செயின்ட் பெர்னார்டு என்ற மடத்துச் சத்திரம் ஒன்றிடம் கொண்டுபோய் விட்டது. அங்கிருப்பவர்கள் அறியாமல் யாரும் அந்த வழியே சென்றுவிடமுடியாது. புரூனோ யார் கண்ணிலும் படக்கூடாது என்று இருட்டில் நடந்தான் நாயொன்று குரைத்து அவன்

வரவைத் தெரிவித்தது. யார் அந்த வழியாகப் போனாலும் அந்த மடத்துச் சத்திரத்தில் தங்கி விட்டுப் போவது வழக்கம். தான் அங்குப் போகாமல் போனால் தன்னைப்பற்றி ஐயங்கொள்வார்கள் என்று கருதி, புரூனோ மடத்துச் சத்திரத்தில் நுழைந்தான். அங்கேயே தங்கியிருக்க அவன் எண்ணங்கொள்ளவில்லை. தங்கினால் தன்னுடைய உடையிலிருந்து தன்னை யார் என்று அச்சத்திரத்திலுள்ளவர்கள் அறிந்துகொள்வார்கள் என்றும், தன்னிடம் அவர்கள் கேள்விகள் கேட்க முயன்றால், தான் யார் என்பதைச் சொல்லிவிட வேண்டி வரும் என்றும் எண்ணி, அவன் அங்கு தங்குவதற்கு அஞ்சினான். அப்பொழுது இரவு வேளையாக இருந்ததால், அவனை யாரும் அவ்வளவுத் தெளிவாக அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை. யாரோ வழிப்போக்கன் என்ற நிலையிலேயே கருதியிருந்துவிட்டனர். புரூனோ சிறிது ரொட்டித் துண்டும், கொஞ்சம் ஒயினும் சாப்பிட்டுவிட்டு, தான் அவசரமாகப் போக வேண்டிய குறிப்பைத் தெரிவித்துவிட்டு, மேற்கொண்டு நடக்க ஆரம்பித்தான். நான்கு அல்லது ஐந்து நாய்கள் அவனைச் சுற்றி வளைத்துக்கொண்டு, அவன்கூட குரைத்துக் கொண்டே சென்றன. சிறிது தொலைவு சென்றவுடன் அவைகள் திரும்பிவிட்டன. புரூனோ செங்குத்தான சரிவில் கீழ்நோக்கி இறங்கிச் செல்லவேண்டியிருந்தது. கீழ்நோக்கி இறங்கி இறங்கி இறுதியாக செயின்ட் பையெர்ரே என்ற இடத்தைச் சேர்ந்தான். அன்று இரவுப் பொழுதை அங்கு கழித்தான். மடத்தை விட்டதற்குப் பிறகு அங்குதான், அச்சமின்றி, அவனால் அமைதியாகத் தூங்க முடிந்தது.

மறுநாள் எழுந்தவுடன் புதுமுறுக்கோடும், ஊக்கத்தோடும் தன் பயணத்தைத் தொடங்கினான். அவன் சென்ற வழி மேலும் மேலும் கீழ்நோக்கிச் சரிந்துபோய்க்கொண்டேயிருந்தது. பிளாங்க் மலை, லெமான் ஏரி ஆகியவற்றைக் கடந்து இறுதியில் ஜெனிவாவின் கோட்டைச் சுவர்கள் அருகே வந்து சேர்ந்தான். அவன் புறப்பட்டு வரும்போது, இந்த இடத்துக்குப் போய்ச் சேருவோம் என்ற எண்ணமிட்டபடிதான் வந்தான். அச்சம் ஏதுமின்றி அந்த நகருக்குள் பெருமித உணர்வோடு நுழைந்தான்.

கால்வின், பேஜா போன்ற சீர்திருத்தக்காரர்கள் தோன்றி, பேரும் புகழும் பெற்ற இடம் அதுதான். கால்வின் அப்பொழுது இறந்துவிட்டார். கால்வின் 1564-ல் இறந்தார்; ஜியார்டனோ ஜெனிவா போய்ச் சேர்ந்தது 1580-ல் ஆகும். கால்வினுடைய கொள்கைகள் ஜெனிவாவில் தலைதூக்கி நின்றன. ஜியார்டனோ போப்பாண்டவரை எதிர்த்த வீரன் என்ற முறையில் ஜெனிவாவிலுள்ள சீர்திருத்தக்காரர்கள் அவனை வரவேற்றார்கள். புரூனோ இளைஞன் என்ற நிலைமையிலிருந்து மாறி பலராலும் மதிக்கத்தக்க மனிதர் ஆனார். அப்பொழுது அவருக்கு வயது முப்பது இருக்கும். புரூனோ ரோமின் விலங்குகளை மட்டுமல்லாமல், கிருத்துவமதத்தின் விலங்குகளையே, உடைக்கக் கிளம்பியவர் என்பதை ஜெனிவா மக்கள் அறியவில்லை. ரோமின் கொள்கையால் எப்படி புரூனோவின் உள்ளத்தைத் தன்பால் ஈர்க்க இயலவில்லையோ, அதைவிட இயலவில்லை கால்வினின் கொள்கையால். புரூனோவால் சிறிது காலந்தான் ஓய்வாகவும், அமைதியாகவும் காலங்கழிக்க முடிந்தது. பிறகு பலரோடும் வாக்குவாதமும், சண்டையும், சச்சரவும் போட ஆரம்பித்தார். புரூனோ அரிஸ்டாடிலின் தத்துவத்தை எதிர்த்து அதிலுள்ள குறைபாடுகளை விளக்கினார். கத்தோலிக்கக் கோயில்களில் அரிஸ்டாடிலின் தத்துவம் எவ்வளவு சிறப்பாகவும், ஆதாரமாகவும் போற்றப்பட்டு வந்ததோ, அந்த அளவுக்கே ஜெனிவாவிலும் போற்றப்பட்டது. தர்க்கத் துறையிலும் சரி அல்லது வேறு எந்தக் கல்வித்துறையிலும் சரி அரிஸ்டாடிலின் கொள்கைகளை மீறி யாரும், எப்போதும் தங்கள் விருப்பப்படி போகக்கூடாது என்று ஜெனிவாவில் சட்டங்கூட இயற்றி வைத்திருந்தனர்.

அத்தகைய கட்டுப்பாடான அடக்குமுறைச் சட்டத்தின் கீழ் வாழ, புரூனோவுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. அறிவிலும், ஆராய்ச்சியிலும் மேலோங்கிச் செல்லவேண்டும் என்று வேட்கையுற்றுத் திரிகிற அவருக்கு ஜெனிவாவும் ஒரு கத்தோலிக்க மடம்போலவே காணப்பட்டது. இதற்குள் பல மதவாதிகளின் தீய பார்வை புரூனோவின்மேல் விழுந்தது; பல கடுஞ்சொற்கள் அவர்மேல் வீசப்பட்டன. ஜெனிவாவிலுள்ள பிராட்டெஸ்டண்டுகள் ரோம் கொள்கையிலிருந்து மாறுபட தங்களுக்கு உரிமை

உண்டு என்றும், அதே நேரத்தில் தங்கள் கொள்கையிலிருந்து மாறுபட யாருக்கும் உரிமையில்லை என்றும் வாதிட்டு நின்றது முதலில் புரூனோவுக்கு வியப்பைத் தந்தது; பிறகு வெறுப்பைத் தந்தது. மதக்கருத்திலே மாறுபட்டான் என்ற காரணத்துக்காக அதற்குச் சுமார் இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன் சேர்வேடேஸ் என்பானை கால்வின் ஜெனிவா நகரில் தீயில் போட்டுப் பொசுக்கிக் கொன்றார். அந்தச் செய்தி புரூனோவுக்குச் சிலரால் நினைவுறுத்தப்பட்டது. இத்தாலியில் ஏற்பட்ட நிலைமை சுவிட்ஜர்லாந்திலும் நிலைபெற்றிருப்பதைக் கண்ட புரூனோ, அதைவிட்டு வெளியேறி விட முடிவுசெய்தார்.

ஜெனிவா நகரின் சுவரைச் சேர்ந்த வீடு ஒன்றில் வாழ்ந்தவர், புரூனோவுக்குத் தங்குமிடம் அளித்திருந்தார். ஒரு நாள் இரவு எங்கும் இருள் சூழ்ந்திருந்தபோது, புரூனோ யாருக்கும் தெரியாமல், சாளரத்திலே கயிறு ஒன்றினைக்கட்டி வெளிப்பக்கமாகத் தொங்கவிட்டு, அதைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கி, பிரான்ஸ் நாடு நோக்கி விரைந்தேகினார். மதத்தால் புறக்கணிக்கப்பட்டவரும், மத விசாரணைக்குழுவால் தேடப்பட்டவருமான புரூனோ மெல்ல லியான்ஸ் நகரைப் போய்ச்சேர்ந்தார்.

புரூனோ லியான்ஸ் நகரில் தங்கியிருந்தது பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் ஒன்றும் தெரியவில்லை. அந்த நாட்களில் லியான்ஸ் நகரில் அச்சுத் தொழில் நடைபெற்றது. ஏராளமான புத்தகங்கள் அங்கு அச்சியற்றப்பெற்று, ஐரோப்பா முழுவதும் பரப்பப்பட்டன. அச்சுப்பொறி எப்படி வேலை செய்கிறது என்பதைக் கண்டறிந்து மகிழ்ச்சியுறும் பொருட்டு அவர் லியான்ஸ் போயிருந்தாலும் போயிருக்கக்கூடும். ஆனால், லியான்ஸ் நகரில் அவர் நீண்ட நாட்கள் தங்கவில்லை என்பதுமட்டும் தெரிகிறது. அங்கிருந்து டூலவ்ஸ் என்ற ஊருக்குச் சென்றார். டூலவ்ஸில் புரூனோ தங்குவதற்கு ஏற்றவாறு பாதுகாப்பு இடம் கிடைக்கவில்லை. ஏனென்றால் டூலவ்ஸ் மத நம்பிக்கையில் அவ்வளவு ஆழமாக ஊறிப் போய்க்கிடந்தது மத எதிரி என்று சொல்லப்பட்டு, நாலாப்பக்கங்களிலிருந்தும் அவருக்கு எதிர்ப்புகள் கிளம்பின. அதே ஊரில்தான் அப்போதைக்கு முப்பத்தாறு ஆண்டுகளுக்குப் பின்பு, புரூனோவுக்கு நெருங்கிய நண்பரான வானினி என்பார், மத எதிரி என்ற குற்றஞ் சாட்டப்பட்டுத் தீயிலிட்டுப் பொசுக்கப்பட்டார். போப்பை ஆதரிக்கும் கத்தோலிக்க நெறியினரும், ஹியூஜ்னட் என்ற பிராட்டெஸ்டண்டு நெறியினரும் மத மாற்சரியத்தோடும், மதவெறியோடும் ஒருவரோடொருவர் போரிட்டுக்கொண்டனர். கத்தோலிக்கர்கள் ஹியூஜ்னட்களுடைய கோயில்களைச் சூறையாடினர்; அதேபோல் ஹியூஜ்னட்களும் கத்தோலிக்கக் கோயில்களைக் கொள்ளையடித்தார்கள். நாட்டிலும் நகரங்களிலும் குருதி வெள்ளம் 'ஏசுபெருமான்' பெயரால் பெருக்கெடுத்தோடிற்று. மதவெறி குடும்பத்துக்குள்ளேயே குழப்பத்தை உண்டாக்கிற்று; பொதுமக்களிடையே நிலவி வந்த நட்புத்தன்மையைக் கெடுத்தன. இப்படிப்பட்ட மதப்போர் நிகழ்ந்துகொண்டிருக்கும்போதுதான், புரூனோ பிரான்ஸில் நுழைந்தான். மதம் கிருத்தவ நாட்டை எந்த அளவுக்கு அலக்கழிக்கிறது என்பதையும், கத்தோலிக்கர்களும் பிராட்டெஸ்டண்டுகளும் அவரவர்களின் கடவுள்களின் புகழை வளர்க்க, எந்த அளவுக்குக் கொள்ளையும், கொலையும் செய்கிறார்கள் என்பதையும் புரூனோ நேரில் கண்டறிந்துகொண்டார்.

1582-ம் ஆண்டு, நீண்ட நாட்களாகக் காண வேண்டுமென்று ஆவலோடு எதிர்பார்த்திருந்த பாரிஸ் நகரம் சென்றடைந்தார் புரூனோ. அங்கு தமக்கு வரவேற்பு கிடைக்கும் என்றும், தாம் தங்க நல்லதொரு பாதுகாப்பு ஏற்படும் என்றும் புரூனோ எதிர்பார்த்தார். பாரிஸ் நகரில் சோர்போர்ன் மடாலயம் கொடுமைகளின் கூடமாகவும், புதியகருத்தின் எதிர்ப்பிடமாகவும் காட்சியளித்தது. ஆனால் அதற்கு நேர் மாறுபட்ட கொள்கையுடன் பிரான்ஸ் அரசியலார்கல்லூரி திகழ்ந்தது. அரசியலார் கல்லூரி அறிவியல் உணர்ச்சிக்கு ஊக்கம் கொடுத்து, புதிய அறிவொளியை வரவேற்று நின்றது. சிந்தனைச் சிற்பியான புரூனோவுக்கு அந்தக் கல்லூரி ஏற்ற இடமாக இருந்தது. சோர்போன் மடாலயம் கொண்டிருந்த அரிஸ்டாடிலின் கொள்கை வன்மையாக எதிர்த்துநிற்கும் ஆற்றல் புரூனோவிடம் நிரம்பிக்கிடந்தது. புரூனோ, பொதுமக்களுக்குத் தத்துவக்கருத்துக்களைக் கற்பிக்கத் தாம் விரும்புவதாகவும், அதற்கு, அனுமதியளிக்கவேண்டும் என்று கோரி அரசியலாரிடம் விண்ணப்பம் செய்திருந்

தார். அவரின் விருப்பத்திற்கு அரசியலாரும் இசைந்தார்கள். சிறிதுநாட்களில் புரூனோவின் அறிவாற்றல் பாரிஸ் மக்களுக்குப் புலப்பட்டது. ஏராளமான மாணுக்கர்கள் அவரைப் புடைசூழ்ந்து கொண்டனர். அவரது புலமையின் செறிவையும், சொற்பொழிவாற்றும் திறமையையும் கண்டு பலரும் பாராட்டுவாராயினர். புரூனோ சுவைபயக்காத தத்துவத்துறையைச் சுவைபெறச் செய்தார்; கடுமையான கல்விமுறையை எளிமையாக்கினர். புரூனோவின் பெயரும், புகழும் பாரிஸ் நகரம் முழுவதும் பரவிக்கமழ்ந்தன.

அப்பொழுது மூன்ருவது ஹென்றி பிரான்ஸை அரசுசெலுத்தி வந்தான். அவன் புரூனோவுக்கு அழைப்பு விடுத்துத், தன் நாளவையில் வந்து காணுமாறு சொல்லினன். மடாலயத்தின் அறையில் கட்டுப்பட்டுக்கிடந்த புரூனோ, இப்பொழுது மன்னனின் அவைக்களத்தில் பெருமிதத்தோடு நிற்கும் நிலைபெற்ருர்! வேத மந்திரங்கள் ஓதுவதிலே காலங் கழிக்கவேண்டியிருந்த நிலை மாறி, அறிவுப் போர் புரிந்து வெற்றிகண்டு அகமகிழும் நிலை ஏற்பட்டது! புரூனோவுக்கு அரண்மனையிலே இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஒருநாள் அரசன் ஹென்றி புரூனோவின் அறையில் நுழைந்து, "ஜியார்டனே! நான் உங்களுக்கு நல்ல செய்தியொன்று கொண்டுவந்துள்ளேன். பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியர் வேலை காலியாக இருக்கிறது. பாரிஸ் நகரத்தைக் கலக்கிவிட்டிருக்கும் திறமை படைத்த புரூனோவைத் தவிர, வேறு யாரும், அந்த இடத்திற்குத் தகுந்தவர்களல்லர் என்று பல்கலைக்கழகத்தார் கூறுகிருர்கள்" என்று மகிழ்ச்சிகொண்ட தோற்றத்தோடு கூறினர். புரூனோ அரசனைக்கண்டதும் அஞ்சி எழுந்து நின்று, இந்தச் செய்தியைக்கேட்டதும், அவனையறியாமலே வியப்புணர்ச்சிபெற்று, மகிழ்ச்சியோடும் மலர்ச்சியோடும் நின்ருன். "ஐயா! பேராசிரியர் பதவி! பாரிஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவி! இந்தப் பதவி நீண்ட நாட்களுக்குப் பிறகே எனக்குக் கிடைக்கமுடியும் என்று கனவு கண்டுகொண்டிருந்தேன். ஆனால் நான் மிக இளைஞன்; மிகத் தெரியாதவன்..." என்று புரூனோ சொல்லிக்கொண்டிருக்கும்போதே அரசன் இடைமறுத்து, "இல்லை! இல்லை! பாரிஸ் நகரத்து இளைஞர்களை உங்களைவிட வேறு யாரால் ஈர்க்கமுடியும்? அல்லது துடிப்புடைய இளைஞர்களை உங்களைத்தவிர வேறு யாரால் கட்டுப்படுத்த முடியும்? இதை மிகச் சாதாரணமானது என்று நினைக்கவேண்டாம்! ஜியார்டனே! மறுக்கவேண்டாம்! என்னுடைய தாயின் நாட்டைச் சேர்ந்த ஒருவர், அதுவும் எல்லாத் தகுதியும் ஒருசேரப்பெற்ற ஒருவர், அந்தப் பதவியை வகிக்கவேண்டும் என்பதுதான், எனனுடைய பெருவிருப்பம்" என்று கூறினன்.

"ஐயா! நான் ஒப்புக்கொள்ளவேண்டியதைத்தவிர வேறு எதுவும் சொல்வதற்கில்லை என்று கருதுகிறேன். நீண்ட அலைச்சலுக்குப் பிறகு எனக்கு ஓய்வும், அமைதியும் ஏற்படும் என்று நினைக்கிறேன். அன்பும் நட்பும் உடைய அரசே! என்னுடைய கடமைகள் எப்பொழுது ஆரம்பமாகும்?" என்று நன்றியும் நம்பிக்கையும் கலந்த ஒலியில் கேட்டார் புரூனோ.

"ஓ! ஆரம்பம்? இப்பொழுதேதான்! கட்டளைகளில் கையெழுத்திடுதல் போன்ற சில சடங்குகள் முன் கூட்டி நடந்தேறியாகவேண்டும் அவ்வளவுதான்! இப்பொழுதே ஒன்று சொல்லவேண்டும் என்று நினைத்தேன். ஜியார்டனே! நீங்கள் மதக்கடமைகள் பற்றிக் கவலையற்றிருக்கிறீர்கள்! கடவுள் வழிபாட்டின் போது உங்களைக் கண்டதாக எனக்கு நினைவு இல்லை. என் அருமைப் பேராசிரியரே! கடவுள் வழிபாடு செய்யவேண்டியது உங்களுடைய புதிய பதவியின் கடமைகளுள் ஒன்று என்பதை மறந்துவிடவேண்டாம்" என்று வேந்தன் மறுமொழி பகர்ந்தான்.

புரூனோ உடனே திடுக்கிட்டுப்போனுர்; அவருடைய ஒளி வீசிக்கொண்டிருந்த முகம் புகைபடர்ந்தது; கறுத்தது.

"அரசே! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்பது எனக்குத் தெளிவாகத் தெரியவேண்டுமே! பேராசிரியர் என்ற முறையில், நான் கடவுள் வழிபாடு செய்யவேண்டுமா?" என்று புரூனோ ஐயப்பாட்டோடு கேட்டார்.

"ஆமாம்! உறுதியாகச் செய்யவேண்டும்! நீங்கள் பேராசிரியராக இருந்துகொண்டு, பல்கலைக் கழகத்தில் மதமற்றத் தன்மைக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடாதல்லவா? ஓ! அதனால் நேரம் ஒன்றும் மிகவாகச் செலவழிக்கவேண்டிவராது. அதுபற்றி நான் உறுதிசொல்கிறேன். மனிதர்களிலே மிகவும்

சுறுசுறுப்புப் படைத்தவர்களாக இருக்கும் நீங்கள், அவ்வளவு குறைந்த அளவு நேரம் செலவழிக்கப்படுவதற்காக வருத்தப்படவேண்டிய இன்றியமையாமை இல்லை" என்று அரசன் புருனோவின் குரலிலும், முகத்திலும் ஏற்பட்ட மாறுபாட்டைக் கவனிக்காமல் கூறினான்.

புருனோவின் இதயம் படபடவென்று துடித்துக்கொண்டிருந்ததால், சாளரத்தின் பக்கம் திரும்பி, அதன் அருகே சென்று நின்றுகொண்டு, எதையோ வெளியில் உற்றுப் பார்த்துக்கொண்டு சிந்தித்த வண்ணமிருந்தார். பேராசிரியர் பதவி நிலையான இடத்தையும், போதுமான வருவாயையும் தருவதுதான்; ஆனால், எதற்காகக் கடவுள் வழிபாடு? கடவுள் வழிபாடு என்பதுதான் என்ன? ஒரு சில முட்டாள்தனமான சொற்களால் ஆன பொருளற்ற சொற்றொடர்கள்தாமே? இவற்றிலெல்லாம் நம்பிக்கை இருக்கிறது என்று பாசாங்கு செய்யவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? தாம் தனியாக இருந்துகொண்டு, அமைதியாகத் தத்துவக் கருத்துக்களைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கலாமே; தாம் அந்தப் பேராசிரியர் பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்தால், நிலையில்லாத கொடுங்கோன்மையுடைய அரசன் தம்மை எதிர்த்துக் கிளம்புவான்; இத்தாலியிலிருந்தும் சுவிட்ஜர்லாந்திலிருந்தும், லியான்ஸிலிருந்தும் லெவனிலிருந்தும் துரத்தப்பட்டதுபோல, பாரிஸிலிருந்தும் துரத்தப்படும் நிலைமை ஏற்படும்; கடவுள் வழிபாடு; ஒரே பொய்! என்றவாறெல்லாம் மனதில் எண்ணிக்கொண்டு, விரிந்த முகத்தோடும் ஒளி வீசும் கண்களோடும் அரசன் பக்கம் திரும்பினார். அரசன் வியப்புணர்ச்சியோடு அவரைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"ஐயா! இத்தாலியிலிருந்து ஓடிவந்தவனிடம் நீங்கள் நல்லவிதமாகவே நடந்துகொள்கிறீர்கள். நீங்கள் என்னைப் பெருமைப்படுத்திக்கொடுக்கிற பரிசோடு விதிக்கப்படுகிற நிபந்தனையை, நான் ஏற்றுக்கொள்ள முடியாமலிருப்பதற்குத், தாங்கள் சினங்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று புருனோ அடக்கமாகக் கூறினார்.

"நிபந்தனையா? என்ன நிபந்தனை?" என்று அரசன் கேட்டான்.

"ஐயா! கடவுள் வழிபாட்டிலே கலந்துகொள்ளவேண்டும் என்பது" என்று புருனோ விடையிறுத்தார்.

"புருனோ! அது அறியாமை! வழிபாட்டின் கால அளவு மிகக் குறுகியது என்பதைத்தான் நான் முன்பே சொல்லிவிட்டேனே! நீங்கள் மதக்கடமைகளில் எவ்வளவு அசட்டையாக இருந்தபோதிலும், கடவுள் வழிபாட்டில் கலந்துகொள்வதை எந்த நல்ல கத்தோலிக்கனும் மறுக்கக்கூடாது" என்று மன்னன் சமாதானம் கூறினான்.

"ஆனால், ஐயா! நான் ஒரு கத்தோலிக்கனல்லவே! நான் என் மனச்சான்றுபடி, நாணயமாகக் கடவுள் வழிபாட்டில் கலந்துகொள்ள முடியாதே!" என்று புருனோ சொல்லிக்கொண்டேபோகும்போது, அரசன் திடுக்கிட்டு, அஞ்சிப் பின்னால் நகர்ந்தான். அப்பொழுது, புருனோ "நில்லுங்கள்! நான் மனமறிந்து உங்களை ஏமாற்ற விரும்பவில்லை. என்னுடைய விரிவுரைகளெல்லாம் தத்துவக்கலையைப்பற்றி இருக்குமேயொழிய, மத வேதாந்தத்தைப்பற்றியதாக இரா. என்னுடைய சொந்த நம்பிக்கையைப் பொறுத்துக் கேள்வி எழவேண்டிய அவசியம் அங்கு ஏற்படவில்லை. நீண்ட காலத்திற்கு முன்பே நான் பக்தியைப் பற்றி ஐயங்கொள்ள ஆரம்பித்துவிட்டேன். நான் 1572-ம் ஆண்டில் பாதிரியாராக மாறினேன். ஆனால் என்னுடைய படிப்பு என்னுடைய பக்தியைக் கலகலக்கச் செய்துவிட்டது" என்று புருனோ சொல்லிக்கொண்டேபோனார். ஆனால் தாம் சொல்வதை அரசன் சரியாகக் காதுகொடுத்துக் கேட்கவில்லை என்பதைத் தெரிந்துகொண்டு, அந்த அளவோடு தம் பேச்சை நிறுத்திக்கொண்டார். அரசனின் முகம் கறுகறுத்துவிட்டது; அவன் அறையில் மேலும் கீழுமாய் நடந்துகொண்டிருந்தான். இறுதியாக நடப்பதை நிறுத்திவிட்டு, புருனோவை நிமிர்ந்து பார்த்தான்.

(தொடரும்)

மனையறம் போற்றும் மாண்பு

அவளுக்கும் அவனுக்கும் திருமணம் நடந்தேறுகிறது; இன்பத்துறையில் இறுமாந்திருக்கின்றனர்! கவர்ச்சிகரமான வாழ்வு! எனவே கவலையற்றிருக்கிறார்கள்!

அவர்களது மகிழ்ச்சியைப் பெருக்க, மகன் ஒருவன் பிறக்கிறான். குழந்தையைச் சீராட்டிப், பாராட்டித், தாலாட்டி மகிழ்வெய்துகின்றனர்.

மகனைப் பெற்றெடுத்தால், அவள், உடல் வனப்பும்—வளமும் சற்றுக் குறைந்து காணப்படுகிறாள்; மேலும் தன் அன்பினை மகனுக்கும், மணாளனுக்கும் பகிர்ந்து காட்டவேண்டிய நிலைமையையும் அடைகிறாள். அவளைப்போலவே, தானும் தன் அன்பைப் பகிர்ந்துகொண்டு, வாழ்க்கையின் நிறையின்பத்தைப் பெறக் கற்றுக்கொள்ளாத அத்தலைவன், அவளால் தான் பெறும் இன்பம் நாளடைவில் குறைந்துவிட்டது என்று எண்ணி, அவன் தன்னை அறியாமலேயே, தனது மனதைப் பிற பெண்களின் மீது அலைய விடுகிறான். தலைவனுடைய மனநிலையை அறிந்துகொண்ட அவனது தோழன் ஒருவன், தலைவனுக்கு வேறுவழியில் இன்பம் தேடித்தர முயலுகிறான். தலைவனுக்கு அமைந்த அத்தோழன் பண்புகெட்டவனாக இருந்ததால் தலைவனைப் பொதுமகளிர் வாழும் பரத்தையர் சேரிக்கு அழைத்துச் செல்ல முயலுகிறான். பரத்தைப் பெண்களின் அழகு முதலியவற்றைச் சிறப்பாக எடுத்துக்கூறி, தலைவனைப் பெரிதும் ஊக்குவிக்கிறான். தலைவனும் பரத்தையர் சேரி போக ஒருப்படுகிறான்.

பரத்தையர், கட்டிளங் காளைப்பருவத்தினனான அத்தலைவனின் அழகுத்தோற்றத்தையும், செல்வச் செழிப்பையுங்கண்டு மயங்கி, ஒவ்வொருவரும், தத்தம் காமவலையில் அவனைச் சிக்கவைக்க முயலுகின்றனர். பரத்தையர் காமக்கலையில் சிறந்து, தேர்ந்து விளங்கினராதலால், அவனும் அவர்களோடு கூடி இன்பத்தைப் பெறுவதிலே முனைந்து நின்றான். தோழன் அவனுக்குப் பேருதவியாக இருந்தான். பல மலர்களிலேயும் தங்கித் தேனைக் குடித்துவிட்டுச் செல்லும் வண்டுபோல், அவன் பரத்தையர் சேரியில் ஓயாமல் சுற்றித்திரிந்து கொண்டிருக்கிறான். வீட்டை மறந்து, அன்பு மனைவியை—அருமை மகனை மறந்து, சேரியின்பத்தில் திளைத்துக்கிடக்கிறான் தலைவன்.

தலைவியோ தன் காதலனின் வரவைக் காணாமல் கலங்குகிறாள். பொருள் தேட வேற்றூர் சென்றிருப்பானோ அல்லது மாற்றரசனைத் தோற்கடிக்கப் போர்ப்படை எடுத்துப் போயிருப்பானோ என்று பலவாறாக எண்ணுகிறாள். தன் கணவன் எங்கு சென்றானோ, அவனுக்கு ஏது நேர்ந்ததோ என்று நினைத்து நினைத்துக் கவலையுறுகின்றாள். மகனோடு கொஞ்சிக் குலாவுவதிலும், வீட்டிற்கு வரும் விருந்தினர்களை வரவேற்று ஓம்புதலிலும் காலங்கழித்து, வருத்தத்தை மறந்து வாழ முயலுகிறாள்; என்றாலும் அவளுடைய உள்ளமும், உடலும் நாளுக்குநாள் வாடியே காணப்படுகின்றன.

அன்றாடம் குழந்தைக்கு அழகுசெய்துவிட்டு, அவன் மழலை மொழிகேட்டு, குறுநடை கண்டு மகிழ்வதிலே நாட்களைக் கழித்துவருகிறாள். ஒருநாள் தலைவனின் தோழன் தெருவழியே வருகிறான் பரத்தையர் சேரி நோக்கிப் போகும் எண்ணத்துடன். தலைவி தன்னைப் பார்த்துவிடக் கூடாது என்று கருதி, ஒளிந்து மறைந்து, வீட்டிற்குத் தொலைவாக விலகி, அச்சத்துடன் போய்க்கொண்டிருக்கிறான். தலைவனின் நண்பன் போவதைப் பார்த்துவிட்ட தலைவி, அவனை விளித்துக் கூப்பிடுகிறாள்.

தலைவன் சென்றிருக்கும் இடம் ஒருக்கால் அவனுக்குத் தெரிந்திருக்கக் கூடுமோ என்று எண்ணி, அதனை அறிந்துகொள்ளவே தலைவி அப்பாங்கனை அழைத்தாள்.

"ஏன் கூப்பிட்டீர்கள்?" என்று தழதழத்த குரலில் கேட்டுவிட்டு, வீட்டுக்கு அருகாமையில்கூட வர அச்சப்பட்டுக்கொண்டு, தயக்கத்துடன் அங்கே நின்றுவிடுகிறான்.

"ஏனப்பா, உன்னை இப்பொழுதெல்லாம், காணவே முடியவில்லை?"

"ஓய்வு ஒழிவு ஏற்படாததால், இப்பக்கம் வருவதற்கு இயலுவதில்லை!"

"எம் மணாளரை எங்கேனும் நீ கண்டனையா? அவர் வீட்டைவிட்டுப் போய் பலநாட்களாகின்றன. இன்னமும் அவர் திரும்பவேயில்லை!"

"அப்படியா?....நான் அவரைப் பார்க்கவே இல்லையே! அவர் எங்கு போய் இருப்பார்?..." என்று தானும் அவளோடு சேர்ந்து வருத்தப்படுவதைப்போல் காட்டிக்கொண்டான்.

"நீ இப்பொழுது எங்கப்பா இருக்கிறாய்?" என்று தலைவி வினவுகிறாள்.

"நாங்கள் இப்பொழுது எனதிப்பாடியில் இருக்கிறோம்" என்று வாய்தவறிச் சொல்லிவிடுகிறான். எனதிப்பாடி என்பது எனதிப் பட்டம் பெற்ற படைத்தலைவன் ஒருவன் குடியேற்றிய பரத்தையர் சேரி. அவனது மனம் பரத்தையர் சேரியிலேயே படிந்திருந்ததால் இப்பொழுது இருப்பது பரத்தையர்சேரி என்று தவறிச் சொல்லிவிட்டதோடல்லாமல், "நான்" என்பதற்குப் பதிலாக "நாங்கள்" என்று வாய்குழறிச் சொல்லிவிட்டான்.

தலைவனும் தோழனும் பரத்தையர் சேரியில் சுற்றித் திரிகின்றார்கள் என்பதைக் கேட்டவுடனே, தலைவி திடுக்கிட்டு, "நீ முதலில் பொய் அல்லவா சொன்னாய்?...." என்று வெகுண்டு கேட்டுக்கொண்டிருக்கும்போதே தோழன் அஞ்சி, வெட்கித், தலைகுனிந்து ஓடிவிடுகிறான்.

தலைவன் பரத்தையர்களோடு கூடிக்குலாவியிருக்கும் செய்தி அவள் உள்ளத்தை வாட்டுகிறது. மனந்தாளாமல் துயருறுகிறாள். தலைவனின் செய்கையைப் பற்றிப் பிறரிடம் கூறுவதோ, அல்லது தானே பரத்தையர் சேரிக்குச் சென்று அழைத்துவருவதோ தன் நிலைமைக்கு ஏற்ற செயலாகாது என்று கருதுகிறாள். அதனால் வேறுவழி ஏதும் காணாது, கணவனைப் பிரிந்த நிலையில், தன் மன நோய் தீர்க்கும் மருந்து, தன் மகன்தான் என்று எண்ணி, அவனை வளர்த்து வருவதிலே கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறாள்.

மகன் மழலைமொழிபேசி, குறுநடை நடக்கும் பருவத்தினனாக இருக்கிறான். அவனுடைய வாய், குறைவொன்றில்லாத பவளம் போல், அழகாக இருக்கின்றது. இன்னதென்று புரிந்துகொள்ளமுடியாத, எழுத்து வடிவு பெறாத மழலைச் சொற்களைப் பேசுகிறான். பேசும்போது, ஒழுகும் எச்சல் நீர், அவன் மார்பிலே கிடக்கும் பொற்சங்கிலியை நனைக்கிறது. நறுமண எண்ணெய் தடவி நீவப்பட்டுத், தலையிலே பூசொருகப்பட்டிருத்தலாலே, அவன் தலையினின்றும் நறுமணம் கமழ்கின்றது. முத்துச்சரங்கள் கோர்த்த, பிறைவடிவமாகப் பொன்னாற் செய்யப்பட்ட தலைச்சுட்டி, அவன் நெற்றியில் கிடந்து அசைகிறது அழகிய நிறம்பொதிந்த ஆடை அவன் இடுப்பில் சுற்றிவிடப்பட்டிருக்கிறது. அது அவன் நடையை அடிக்கடி தடுத்துத், தடுக்கிவிழச் செய்கிறது. அவன் அடியெடுத்து வைக்கும் போதெல்லாம், காலில் கட்டிய சதங்கை ஒலிக்கிறது. பொன்னாற் செய்யப்பட்டு, இரத்தினக் கற்களை உள்ளே கொண்டிருப்பதால், சதங்கைச் சலசலவென ஒலிக்கிறது. அவன், ஓயாமல், தாயிடத்துப் பால் குடிப்பதைக்கூட மறந்துவிட்டு, நடைவண்டியை ஓட்டி நடை பழகிக்கொண்டேயிருக்கிறான். சில நேரங்களில், அவன் நீண்ட பொழுது பால்குடிப்பதை மறந்துவிட்டு இருக்கும்போது, தாயினுடைய மார்புகள், பாலாலே விம்மிவிடுவதுண்டு. இப்படி ஓடியாடித் திரிந்து விளையாடும் தன் மகனைப் பார்த்துக்கொண்டிருப்பதிலே தாய்க்குத் தனி இன்பம். ஆலமரத்தின் கீழ் அமர்ந்த இறைவனின் மகன் முருகன் மிக்க அழகுடையவன் என்று பலர் கதைகூற அவள் கேட்டிருக்கிறாளாதலால், அந்தக் கற்பனைக் கடவுளைப் போன்று, தன் மகனும் அழகுவாய்ந்தவன் என்று எண்ணி அடிக்கடி மனம் பூரிப்பாள்.

தாய், ஒருநாள், வேலையற்று ஓய்வாக உட்கார்ந்திருக்கும்போது, தன் மகன் நடைவண்டி

உருட்டி விளையாடுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். தன் மகனின் மழலைச் சொற்களைக் கேட்டு இன்புறவேண்டும் என்ற நினைவுடையவளாய், “என்னுயிரே! ஓடிவா” என்று அன்போடு அழைக்கிறாள். மகனும் ஓடிவந்து தாயைக் கட்டி அணைத்துக்கொள்கிறான்.

தாய் அவனை முத்தமிட்டுக் கொஞ்சுகிறாள். “நான் பெற்ற பெருமானே! பெருந்தகையே! உன் மழலைச்சொல்லைக் கேட்டு என் மனம் குளிர்ந்துபோகுதடா! எங்கே, இன்னும் கொஞ்சம் பேசு! உன் மழலைப்பேச்சு கேட்கக் கேட்க இனிமையாக இருக்கிறதே! அமிழ்தத்தை உண்டாற்போலல்லவா இருக்கிறது! நீ தெருவில் விளையாடும்போது, செவிலித்தாய்மார்கள் நீ திருந்தும்படி கற்றுக்கொடுத்த சொற்களிலே சிலவற்றை, எங்கே கூறு, பார்க்கலாம்!” என்று அன்போடு கேட்டுக்கொண்டிருக்கிறாள். தலைவி, தன்வீட்டிற்கு விருந்தினர் வரும்போதெல்லாம், அவர்களை வரவேற்று, அவர்களுக்கு உணவு முதலியன ஆக்கவேண்டுவதன் காரணமாகக் கையொழியாமற் வேலை செய்துகொண்டே யிருப்பாள்; அப்பொழுதெல்லாம், செவிலித்தாய்மார்கள், குழந்தையைத் தெருப்பக்கம் எடுத்துக்கொண்டுபோய், விளையாடவிட்டு, பேச்சுக்கொடுத்து அவனை மகிழ்விப்பார்கள்; அவன் தாயைக்கூட நினையாமல், விளையாடுவதிலும், செவிலித்தாயரோடு பேசி மகிழ்வதிலும் திளைத்திருப்பான்; அப்படிச் செவிலித்தாய்மார்கள் சொல்லிக்கொடுத்த சொற்களை, அவன் வாயினின்றும், தானும் கேட்டு மகிழவேண்டி, அவற்றிலே சிலவற்றைச் சொல்லச் சொல்லி கேட்கிறாள். தாய் மகனோடு கொஞ்சுவதைப் பார்த்துக்கொண்டு, தலைவியின் தோழியும், பிற பணிப்பெண்களும் எதிரே நின்றுகொண்டிருக்கிறார்கள்.

இந்நிலையில் தலைவன் மனைவியைக் காண ஆவலோடு வருகிறான். மனைவி மகனோடு கொஞ்சி விளையாடுவதைக் காண்கிறான். அவள் கொஞ்சி விளையாடும் அழகை, நன்கு காணவேண்டி, அவளுக்குத் தெரியாமல், அவளின் பின்பக்கம்போய் நிற்கிறான். தலைவன் மெல்ல வந்து, தலைவிக்குப் பின்புறம் நிற்பதைத் தோழியும் பிறரும் அறிகிறார்கள். தன்னைக் கண்டு தோழியும், பிறரும் வணக்கம் செலுத்த முற்பட்டால், தன் வரவைத் தலைவி அறிந்துகொள்வாள் என்று கருதி, அவர்களை வணக்கம் செய்யாதிருக்குமாறு, கையினால் தலைவன் குறிப்பு அறிவிக்கிறான். தோழியும், பிறரும் அவ்வாறே, தலைவன் வந்ததைத், தாங்கள் அறிந்துகொண்டதாகக் காட்டிக்கொள்ளாமல், அப்படியே நிற்கின்றனர்.

மழலை மொழி பேசும்படி, தாய் கேட்பதற்குப் பதில் சொல்ல வாய் திறக்குமுன், தந்தை தாய்க்குப் பின்னால் வந்து நிற்பதை, மகன் பார்த்துவிடுகிறான். உடனே ‘அத்தா! அத்தா!’ என்று கூப்பிடுகிறான். தலைவிக்கு ஒன்றும் புரியவில்லை; ஏன் தன் மகன், இப்பொழுது, அத்தா, அத்தா வென்று அவனது தந்தையை அழைக்கிறான் என்பது அவளுக்கு வியப்பையும், வெறுப்பையும் கொடுக்கிறது. ஒளி பொருந்திய அணிகலங்களை அணிந்துகொண்டு எதிரே நின்றுகொண்டிருக்கும் தோழியைப் பார்த்து, “ஏடீ! ஏனுதிப்பாடியிடத்தேச் சுற்றித்திரியும் தலைவரின் செய்கை நினைந்து நினைந்து, வருந்தும் என் மனநோயைத் தீர்க்கக் கூடிய மருந்து, இவன் என்று கருதித்தானே, இவனோடு நான் கொஞ்சி விளையாடுகிறேன்! அப்படியிருந்தும் இவன் விடாமல் அத்தா, அத்தா என்று அவரையே அழைக்கிறான் பாரடீ!” என்று தலைவி சொல்லுகிறாள். ஆனால் மகனோ, “அத்தா! அத்தா!” என்று கூப்பிட்டவண்ணம் தாவுகிறான். அவன் தந்தையை நினைத்துக்கொண்டு அப்படிக் கூப்பிடுகிறான் போலேயிருக்கிறது என்றெண்ணி, அதனைத் தவறு என்று எடுத்துக்கொள்ளாது, தன் தோள்மேல் தாவும் அவனைத் தோளில் தூக்கிக் கொள்கிறாள். அவன் பின்னும் “அத்தா! அத்தா!” என்றே கூப்பிடுகிறான்.

“பாரடீ! அவர் பெயரைச் சொல்லக் கூடாது என்று சொல்லியும் அழைக்கிறானடீ! அவர் பெயர் இவன் வாயினின்றும் போகாது போலிருக்கிறதே! இதற்கு என்னடீ காரணம்?” என்று வினவுகிறாள் தலைவி.

தோழி கையால் குறிப்புக்காட்டி, பின்னால் வந்து தலைவன் நிற்பதை உணர்த்துகிறாள். தோழியின் குறிப்பினாலும், மகன் கூப்பிடுவதைக் கொண்டும் தலைவன், தனக்குப் பின்னால் நிற்பதைத் தலைவி அறிந்துகொள்கிறாள்.

“பகைவரிடத்தே, படைக்கலங்களைத் திருடிக்கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காகக் கள்வர்

கோட்டைக்குள் நுழைவதைப் போல், இவர் ஒருத்தர் இங்கே வந்திருப்பதைப் பாரடி! இவர் என்னிடத்திலுள்ள அன்பின் காரணமாக வந்திருப்பாரென்று நீ நினைக்கிறாய்? அப்படி நினைக்காதேடி, நினைக்காதே! என்னைக் கேலி செய்வதற்காகவே, இவர் இங்கே வந்துள்ளார்'' என்று தலைவன் காதில் விழும்படி, தலைவி தோழியை நோக்கிக் கூறுகிறாள்.

அதுகேட்ட தலைவன், "ஊரின் மதிற்சுவரைக் காக்கும் காவலாளர்கள், கள்வர்களை உள்ளபடியே கண்ணால் காணுமலிருந்தும், அவர்களைக் காணவில்லை என்று சொன்னால், குற்றம் தங்கள்பால் வந்துசேரும் என்று கருதி எப்படிக் கள்வரைக் கண்டோம் என்று பொய் கூறுகிறார்களோ அதுபோல, நீயும் நான் செய்யாத குறைகளைச் செய்ததாக, என் முன்னால் இல்லாமல், எங்கேயோ இருந்துகொண்டு சொல்லுகிறாய்! என்மீது சினந்துகொள்ளாதே! உன் கட்டளையை ஏற்று நடப்பதல்லாமல், இங்கே, உன் கட்டளையை மீறி யார் நடந்தார்கள்? சொல்?'' என்று தலைவியைக் கேட்கிறான்.

"நீ, நெஞ்சிலே கொஞ்சம்கூட நடுக்கமில்லாமல், எனக்கு வஞ்சனையை இழைத்ததோடல்லாமல், என் அருமை மகன்மீது சிறிதுகூட ஆசையையும் நினையாமல் என் முன்னே வந்து நிற்கிறாய்! பரத்தையின், நகைகள் விளங்குகின்ற மார்போடே, நீ சேர்ந்து அணைந்ததால், அவள் முடியிலிருந்து உதிர்ந்த பூவிதழ்கள் தாம் இன்னமும் உன் ஆடையை விட்டு அகலவில்லையே! அவை, தாமே, எனக்குத் தெரியாமல் அகன்றுவிடட்டும் என்பதை எண்ணித்தானே, காற்று வீசுவதற்கு எதிரே நின்றுகொண்டிருக்கிறாய்! உன்னுடைய குற்றத்தை விளக்க இந்தப் பூவிதழ்களே போதுமே! இப்படி இங்கே நிற்காதே! போய்விடு!'' என்று சினந்து கூறுகிறாள் தலைவி.

"இனிமேல், நான் இப்படிப்பட்ட குற்றத்தைச் செய்யமாட்டேன்! பொறுத்தருள்!'' என்று உறுதிமொழிக் கூறித் தலைவியைக் கெஞ்சுகிறான் தலைவன்.

தலைவி ஏதும் பதில் கூறுமல், சினங்கொண்டவளாய் அப்படியே நிற்கிறாள்.

அதனைக் கண்ட தலைவன், "நான் உறுதிமொழி கூறிய பிறகும், நீ என்னிடத்துக் கொண்ட சினத்தை மாற்றிக்கொள்ளவில்லையாயின், கன்று கட்டியிருக்கும் இடம் நோக்கிப் பசு செல்வதைப்போல், நான் நீயே என்னிடம் வரும்படி என் தந்தையின் பெயரைக்கொண்ட மகனை எடுத்துக்கொள்வேன்'' என்று கூறுகிறான்.

தலைவன் மகனைக் கைநீட்டி வாங்குகிறான்; மகனை அவனிடத்தில் கொடுக்காவிட்டால் அவன் இறந்துவிடுவானே என்று அஞ்சி, தலைவியும் மகனைக் கொடுக்கிறாள். அவ்வளவில் அவள் ஊடல் தீருகிறாள்.

இல்லற வாழ்க்கை இனிது நடைபெறுகிறது!

* * *

கலித்தொகையில். மருதனிளநாகனுர் என்ற புலவர் பாடிய மருதக்கலியின் 16-வது பாட்டின் கருத்துதான் மேலே தீட்டிக்காட்டப்பட்டிருப்பதாகும். ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் ஊடலும் பின் கூடலும் ஆகிய காதல் நிகழ்ச்சி எவ்வாறு நிகழ்கிறது என்பதைப் புலவர் கற்பனை செய்துகாட்டும் திறன் இச்செய்யுளில் சிறந்து விளங்குவதைக் காணலாம். தம் மனதை அடக்கத்தெரியாது, பொதுப் பெண்டிர்களின்மீது அலையவிடும் தன்மையைக் கொண்ட ஆடவர்களுக்கு எடுத்துக்காட்டாக ஒரு தலைவனையும், நிறைகாத்து ஓம்பி இல்லறத்தைச் செவ்வனே இயற்றிவரும் நற்பெண்டிற்கு எடுத்துக்காட்டாக ஒரு தலைவியையும் இச்செய்யுளின்மூலம் எடுத்துக்காட்டித், தலைவனைத் திருத்தவேண்டிய தலைவியது கடமையையும், தன் குற்றத்தையுணர்ந்து, திருந்தி, இல்லறத்தை ஏற்று, ஒழுங்காக நடத்தவேண்டிய தலைவனது கடமையையும் புலவர் இங்கே வற்புறுத்தியுள்ளார். உலகில் இயற்கையாய் நிகழக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகளில் ஒன்றினை எடுத்துக்கொண்டு, உயர்வும் நயமும் தோன்ற ஓவியமாக்கிக் காட்டுவதைப் புலவர் தம் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். இவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் வாழ்ந்த புலவராவார். இவரை மதுரை மருதனிளநாகன் என்றும் அழைப்பார்கள். மருதம் பற்றிய பாடல்களை இயற்றுவதில் வல்லவராக இருந்ததால், மருதன் என்ற அடைமொழி கொடுக்கப்பட்டு அழைக்கப்பட்டார்.

மைஅற விளங்கிய மணிமருள் அவ்வாய்தன்
மெய்பெரு மழலையின் விளங்குபூண் நனைத்தரப்

பொலம்பிறை உள்தாழ்ந்த புனைவினை
உருள்கலம்
நலம்பெறு கமழ்சென்னி நகையொடு துயல்வர
உருவெஞ்சா(து) இடைகாட்டும் உடைகழல்
அந்துகில்
அரிபொலி கிண்கிணி ஆர்ப்புஓவா அடிதட்பப்
பாலொ(டு) அலர்ந்த முலைமறந்து முற்றத்துக்
கால்வல்தேர் கையின் இயக்கி நடைபயிற்றா
ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல வரும்என் னுயிர்;

பெரும, விருந்தொடு கைதூவா எம்மையும்
உள்ளாய்
பெருந்தெருவில் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள்யாம் கேட்ப
மருந்(து)ஓவா நெஞ்சிற்(கு) அமிழ்தம்
அயின்றற்றாப்
பெருந்தகாய் கூறு சில;

எல்லிழாய், சேய்நின்று நாம்கொணர்ந்த பாணன்
சிதைந்தாங்கே
வாயோடி ஏனாதிப் பாடியம் என்றற்றா
நோய்நாம் தணிக்கும் மருந்(து) எனப் பாராட்ட
ஓவாது அடுத்(து)அடுத்(து)அத் தத்தாஎன்
பான்மாண
வேய்மென்றோள் வேய்த்திறஞ் சேர்த்தலும்
மற்றிவன்
வாயுள்ளில் போகான் அரோ;

உள்ளி உழையே ஒருங்கு படைவிடக்
கள்ளர் படர்தந் ததுபோலத் தாம்எம்மை
எள்ளுமார் வந்தாரே ஈங்கு;

ஏதப்பா(டு) எண்ணிப் புரிசை வியலுள்ளோர்
கள்வரைக் காணாது கண்டேம்என் பார்போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவல்நின்
ஆணை கடக்கிற்பார் யார்;

அதிர்வில் படிறெருக்கி வந்(து)என் மகன்மேல்
முதிர்பூண் முலைபொருத ஏதிலாள் முச்சி
உதிர்துகள் உக்கநின் ஆடை ஒலிப்ப
எதிர்வளி நின்றாய் நீ செல்,
இனியெல்லாம்யாம் தீதிலேம் என்று
தெளிப்பவும் கைந்நீவி

யாதொன்றும் எங்கண் மறுத்தரவு இல்லாயின்
மேதக்க எந்தை பெயரனை யாம் கொள்வேம்
தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லும்
மாபோல் படர்தக நாம்.

[மைஅற - குற்றம் நீங்க; மணிமருள் - பவளத்தை ஒக்கும்; மெய்பெறு - எழுத்துவடிவுபெறாத; பூண் - நகை; நனைத்தர - நனைக்க; உருள்கலம் - உருண்ட தனைச்சுட்டி; கழழ்சென்னி - கமழுகின்றதலை; துயல்வர - அசைய; உரு - நிறம்; உடை கழல் - உடுத்துதல் கழன்ற; துகில் - ஆடைவகையுள் சிறந்த ஒன்று; அரி - இரெத்தினக்கற்கள்; கால்வல்தேர் - உருளையோடு ஓடுதல்வல்லதேர், நடைவண்டி; நடை பயிற்றா - நடத்தலைக்கற்று; கைதூவா - கையொழியாத; உள்ளாய் - நினைக்காமல்; ஞாயர் - தாய்மார்; வாயோடி-வாய்தவறி; ஓவாது - ஒழியாது; வேய் - மூங்கில்போன்ற; வாயுள்ளிற்போகான் - வாயினின்றும் அகலான்; எள்ளுமார் - இகழ்தற்கு; ஏதப்பாடு - குற்றம்; வியலுள்ளோர்-ஊரிற்காவலர், படிறெருக்கி- வஞ்சனையைப் போக்கி; முச்சி - முடி; ஒலிப்ப - விளக்க; மறுத்தரவு - மீட்சி; தாவா விருப்பு - கெடாத விருப்பம்; கன்றியாத்து - கன்று கட்டிய இடம்; மா - பசு.]

கிளியோவின் காதலன்

(முன் இதழ் தொடர்ச்சி)

கல்லூரி நாடகமென்றால் கேட்கவேண்டியதில்லை, அங்கு கூடியிருந்த மாணவர்களின் கைதட்டலும், ஆரவாரமும் அலைபோல அடிக்கடி எழுந்து பரவியபடி இருந்தன. சுந்தரமூர்த்தி பிள்ளை — அவர்தான் மாசிலாமணியின் தந்தை — அவரைப்போல மற்றும் பலர் விருந்தினராகவும், அழைக்கப்பெற்றும் வந்திருந்தனர். அவர்களுக்கெல்லாம் முதல் பகுதியில் இடம் வைக்கப்பட்டிருந்தது. மாசிலாமணி பெற்றோர்களை அங்கு உட்காரவைத்து, நானும் பக்கத்தில் அமர்ந்தேன். சிறிது நேரத்துக்குப் பின் நாடகம் ஆரம்பமானது.

முதலில் வெற்றி முழக்கத்துடன் ரோம் படை வீரர்கள் அணிவகுத்து வருகின்றனர். பின்னால் மார்க்கஸ் ஆண்டனி வருகிறான், பளபளக்கும் கவசமணிந்து, முடியிலே அழகிய சிறகுகள் அசைந்திட, இடையிலே உறையிட்ட வாள் ஊசலாட. ரோம் நாட்டு வீரம் பற்றி பேசுகிறான். வெற்றிப் படைகள் கீழ் நாடுகளையெல்லாம் கைப்பற்றும் என ஆர்ப்பரிக்கிறான். "எகிப்து நாட்டு அரசியாம்-கிளியோபாட்ரா என்ற பெயரினளாம்—எகிப்து படைகளைத் தோற்கடித்து, அந்த அரசியை அடிமை செய்து, ரோம் நகர வீதியில் எனது தேரின் பின் நடத்திச் செல்வேன்" என்று ஆண்டனி சபதமிடுகிறான். வீரர்கள் ஆரவாரிக்கின்றனர்.

வீரர்கள் வாளை உயர்த்துகின்றனர், போர் முரசைத் தட்டுகின்றனர், வெற்றிக்கொம்புகளை ஊதுகின்றனர்.

இந்தச் சத்தத்தை அடுத்து இனிய மெல்லோசை தூரத்திலிருந்து வருகிறது.

வீரர்கள் தமது போர் முழக்கத்தை நிறுத்தி, உற்றுக் கேட்கின்றனர்.

தொலைவிலே வந்த கீதம் வர, வர அருகே வருகிறது. யாழின் ஒலி, குழலோசை, பலர் பாடும் இனிய கானம் வருகிறது. வீரர்கள் முரசு தட்டுவதை நிறுத்துகின்றனர், வெற்றிக் கொம்புகளை கீழே போடுகின்றனர்.

இசை வலுவடைகிறது. வீரர்கள் ஒருவர் பின் ஒருவராக போகின்றனர், காந்தத்தால் இழுக்கப்படும் இரும்புத்துண்டுகளைப்போல.

மார்க்கஸ் ஆண்டனி கூவுகிறான் "என்ன, அங்கே? ஏன் போகிறீர்கள்?" என்று. "அழகின் தேவதை வருகிறதாம்!" என்று கடைசி வீரன் பதில் சொல்லிவிட்டு ஓடுகிறான். தனியாக நிற்கும் மார்க்கஸ் அலுத்துக்கொள்ளுகிறான், கோபமடைகிறான், வாளை அசைக்கிறான், காலால் நிலத்தை அறைகிறான்.

அவனது வீரர்களைச் சிதறடித்து, அவனைச் சூழ்ந்துகொள்ள ஒரு படை-ஆடிப்பாடி வரும் மகளிர் படையொன்று வருகிறது. இந்த ரோம் வீரர்களைச் சிதறிச் செல்லவைத்த அந்தப்படை, வாளோடு முரசோ எதுவும் கொண்டுவரவில்லை. அவர்களின் கரங்களில் மின்னிடும் வாளல்ல, மணமிக்க மலர்மாலைகள்தான் சுழன்றன, அவர்கள் லையர் என்னும் யாழைத்தான் தாங்கிவந்தனர், அவர்களின் கைகளில் மெல்லிய குழல்கள்தான் இருந்தன. இவ்வாறு வரும் "வெற்றிப்" படையை ஆண்டனி ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறான். கடைசியாக அந்த மங்கையர் தாம் கொண்டுவந்த தட்டுகளை அவன்முன் வைக்கின்றனர்.

"எகிப்து நாட்டு அரசியின் காணிக்கை!"

"எகிப்து நாட்டு அரசியா? கிளியோபாட்ராவா?" என ஆண்டனி கேட்கிறான்.

"ஆம்!" என்று அவள்—கிளியோபாட்ரா, அழகு தேவதை உடையில், அணியும் மணியும் மின்னிட அவன் எதிரே நிற்கிறாள்.

ஆண்டனி இதைச் சற்றேனும் எதிர்பார்க்க வில்லை. ஆச்சரியத்தால் அவன் மலைத்து நிற்கிறான். இருவரும் ஒருவரை யொருவர் உற்றுப் பார்த்துக் கொள்ளுகின்றனர், எதிரியின் பலத்தை அளவிட நினைக்கும் வாள் வீரர்களைப் போல.

"விருந்தினராக உங்களை நான் அழைக்கிறேன்" என்று அரசி வேண்டுகோள் விடுக்கிறாள்.

"ஓ! இல்லை! எங்களைப் பார்க்கவந்த உங்களுக்கு, நாங்கள் விருந்து தருவதுதான் முறை. ஏ! கனிடியஸ்!" எனத் தன் தளபதியை ஆண்டனி அழைத்தான்.

ஆனால் கிளியோபட்ராவோ, முன்னினும் அதிகக் குழைவுடன், "இல்லை, வேண்டாம்! உங்களுக்கு விருந்திட, எமது தலைநகரில் எல்லாம் தயாராக வைக்கப்பட்டுள்ளன. உடனே புறப்படுங்கள்! உங்கள் வீரர்களனைவரையும் உடன் அழைத்துவாருங்கள்! உல்லாசப் படகுகள் காத்துக்கொண்டிருக்கின்றன!" என்று கூறுகிறாள், ஆண்டனி தலையசைக்கிறான்.

இத்துடன் நாடகத்தில் முதற்காட்சி முடிவடைந்தது. நாங்கள் எதிர்பார்த்ததைவிட எல்லாம் நன்றாக இருந்தன, அதிலும் மார்க்கஸ் ஆண்டனி வேஷத்தில் மாசிலாமணி நடிப்பு மிகப்பொருத்தமாக இருந்தது. அதிலும் எனது பக்கத்திலிருந்த சுந்தரமூர்த்தி பிள்ளைக்கு தனது மகன் நடிப்பதைப் பார்த்து பெருமிதத்துடன் இருந்தார். ஆனால் மாசிலாமணியின் அம்மாவுக்கு கதைப்போக்கு அவ்வளவாகப் புரியவில்லை. எனவே "ஏன், நம்ப தம்பிக்கு ராஜா வேஷம் வேடிக்கையாகப் போட்டிருக்கிறது?" என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

இரண்டாவது சீனில் கிளியோபாட்ரா சிரித்துக்கொண்டு ஓடிவருகிறாள், பின்னால் அவளைத் துரத்திக்கொண்டு ஆண்டனி வருகிறான். கிளியோபபாட்ரா தடுக்கி விழுகிறாள், ஆண்டனி வந்து தூக்கி நிறுத்துகிறான்.

"போதும், போதும்! கிளியோ! ஏன் இப்படி ஓடியாடி விழுகிறாய்?" என்று அவளை உட்காரவைத்து அவள் அடிகளை வருடி விடுகிறான்.

"ஒரு மாவீரர்—படைகள் பல பெற்றவர், களம் பல வென்றவர்—உலகில் மூன்றில் ஒரு பகுதியை ஆள்பவர்—அவர் வருகிறாரென்றால் எதிரிப் படைகளெல்லாம் அச்சமுற்றுச் சிதறிப்போகுமாம், அப்படியிருக்கும்பொழுது அவர் துரத்தி வருகிறாரென்றால் தனியாக ஒரு பெண் என்ன செய்ய முடியும்?"

"விருந்து என்று அழைத்தாய்! ஏதோ மருந்திட்டு என்னை அடிமையாக்கிவிட்டாய்?"

"மருந்தா?"

"ஆம்! அழகாகிய மருந்தால்!"

"அடிமையாகவா?"

"விடுதலையே பெற முடியாத ஒரு அடிமையாக என்னை ஆக்கிவிட்டாய்?"

"உரத்துப் பேசாதீர்கள், ரோம் வீரன் யார் காதிலாவது விழுந்துவிடப் போகிறது. பின் ரோம் நகரமே அதைச் சொல்லிச் சிரித்துக் கொண்டிருக்கும்!"

"ஏன்?"

"ஏன்? எகிப்து அரசியை அடிமையாக்கி இழுத்துவருவேன் என்று சென்ற வீரன், எகிப்து அரசியின் அடிமையாக ஆகிவிட்டாராம் என்று கேலியாகச் சொல்வார்கள்!"

"அவர்கள் எதுவேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும். இதோபார், கிளியோ! நான் மட்டுமல்ல, இந்த உலகத்தையே உன் அடிமையாக்கத் தயாராக ஆகிவிட்டேன்."

"நீங்கள் வாள் வீச்சில் மட்டுமல்ல, வாய்ப் பேச்சிலும் பெரும் வீரராக இருக்கிறீர்கள்!"

"வேடிக்கைப் பேச்சல்ல, என் அரசியே! விரைவிலே நான் வெற்றிகொள்ளும் நாடுகளை உனக்கு அடிமையாக்கிக் காட்டுகிறேன்."

"மறுபடியும் சத்தமிட்டுக் கூவாதீர்கள். ஆக்டோவியஸ் காதில் விழுந்தால் ஆபத்து உண்டாகலாம், உமது மனைவி பல்வியா கேள்விப்பட்டால் கோபிப்பாள், ரோம் சந்தைக் கடையில் வேடிக்கை பேசுவோர்களுக்கு பேச்சு கிடைத்துவிடும்!"

"மீண்டும் அவற்றைப் பற்றி என்னிடம் கூறாதே! உன்னைச் சந்தித்ததிலிருந்து அந்தச் சந்தைக்கடையை மறந்துவிட்டேன்! ரோம் நகரம் டைபர் நதியில் அமிழ்ந்து போனாலும் நான் கவலைப்படப் போவதில்லை! கிளியோ!

என் நைல்நதி நாகமே! ஏன் இப்படி நேரத்தை வீணாகப் போக்கவேண்டும்! வா, போகலாம்! இல்லை, நடந்துவராதே, உன் சிற்றடிகள் நோகும்!"

இத்துடன் இரண்டாவது காட்சி முடிந்து திரை விழுந்தது. என் பக்கத்திலிருந்த சுந்தரமூர்த்தி பிள்ளைக்கு ஒரு சந்தேகம் வந்தது. "அந்தப் பெண் யார்?" என்று கேட்டார். கதையை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையென்று நினைத்து "கிளியோபாட்ரா! முதல் சீனில் வந்தவள்தான்!" என்றேன்.

"ஆமாம் அவள்தான் யார்?"

கதை ஆரம்பத்தையே விளக்கவேண்டியிருந்தது. "கிளியோப்பாட்ராதான் எகிப்து நாட்டு அரசி! அவள் மார்க்கஸ் ஆண்டனியைச் சந்திக்க..." சுந்தரமூர்த்திபிள்ளை இடைமறுத்து, "அதைக் கேட்கவில்லை. அந்தப் பெண் உங்கள் வகுப்பில் படிக்கிறாளா?" என்று கேட்டார். அவருடைய சந்தேகத்தின் காரணம் எனக்குப் புரிந்தது. நான் சிரித்துக்கொண்டு, "இல்லை, அந்த வேஷத்தை ஒரு பையன்தான் போட்டிருக்கிறான்!" என்று சொன்னேன். அவர் சமாதானம் அடைந்தார்.

நாடகம் தொடர்ந்து நடைபெற்றது. சிலசில சமயங்களில் பாடத்தை ஒப்பிப்பதுபோல் இருந்தபோதிலும், பொதுவாக எல்லோரும் உணர்ச்சியுடன், தமது பாகத்துக்குப் பொருத்தமான முறையில் நடித்தனர். எல்லோரையும் மிஞ்சி காணப்பட்டவன் மாசிலாமணி. ஆண்டனி வேஷத்தில் நடிக்கிறவன் அவன்தான் என்று சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள். நாடக பாத்திரத்துக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொண்டு நடிக்கும் அற்புத நடிகனாக அவன் காட்சியளித்தான். அதற்கு முன் நாடகத்தில் நடித்துப் பழக்கமில்லையென்றபோதிலும், ரோம் வரலாறு, பண்பாடுகள், ரோம் வீரர்களின் பழக்கவழக்கங்கள், சீசர், ஆண்டனி, முதலானவர்களின் வாழ்க்கை வரலாறுகள் முதலியவற்றை மனப்பாடம் போல் நன்கு தெரிந்துவைத்திருந்தால், மாசிலாமணியால் அவ்வளவு திறமையாக நடிக்க முடிந்தது. அவனுடைய நடிப்பை அன்று போற்றாதார் யாரும் இருந்திருக்க முடியாது. ஆனால் நாடகம் முடிவதற்கு சிறிது நேரம் இருக்கும்பொழுது எதிர்பாராத சம்பவமொன்று நிகழ்ந்தது.

அந்த சீனில் ஆண்டனி தனது படைத்தலைவர்களுடன் கலந்து போர்த்திட்டங்களைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறான். அவனுக்கு எதிராக ஆக்டேவியஸ் பெரும் படைகளுடன் வருகிறான் என்பதைப் பற்றி கேள்விப்பட்டதும் அந்த ஆலோசனை நடைபெறுகிறது. முதல் எதிர்ப்பு கடற்போரிலா, அல்லது தரைப்போரிலா என்று விவாதித்துக்கொண்டிருக்கின்றனர். அந்தச் சமயத்தில், ஆண்டனி வாளை உருவிக்கொண்டு, அங்குமிங்கும் நடமாடி தாக்குதல்களைக் குறித்திடும்பொழுது, ஒருதடவை அவன் வீசி யெடுத்த வாள், நாடகமேடையில் கட்டப்பட்டிருந்த ஒரு கயிற்றை அறுத்துவிட்டது. உடனே மேலிருந்து ஒரு சீன் சுழன்றுவர, அதில் கட்டப்பட்டிருக்கும் பலமான மரம் மாசிலாமணியின் தலைமீது மோதி கீழே சாய்த்துவிட்டது. உடனே கூக்குரலுடன், பக்கத்திலிருந்தவர்கள் அவனைத் தூக்கிக்கொண்டு போனார்கள். முன் திரை தாழ்த்தப்பட்டு, விளக்குகள் போடப்பட்டன. நானும், சுந்தரமூர்த்தி பிள்ளையும், அவருடைய மனைவியும் உடனே எழுந்து மேடைக்குப்பின் போய்ப் பார்த்தோம். அதற்குள் டாக்டர் வந்து அவனைப் பார்த்துக்கொண்டிருந்தார். பிள்ளைக்கு ஏதோ ஆபத்து என்று பெற்றோர்கள் பதறிவிட்டனர். ஆனால் "ஒன்றுமில்லை, சிறிது மயக்கம், தெளிந்துவிடும்!" என்று டாக்டர் சமாதானப்படுத்தினார். நானும் தலையைப் பிடித்துப் பார்த்தேன், ரத்தக் காயம் ஒன்றும் ஏற்படவில்லை.

கடைசியாக, மூர்ச்சை தெளிந்து மாசிலாமணி எழுந்து உட்கார்ந்தான், சுற்றிலும் பார்த்துவிட்டு, மேடைக்குப்போகத் தயாரானான். மூர்ச்சையடைந்து தெளிந்து இருப்பதாலும், மிகவும் பலவீனமாகக் காணப்பட்டதாலும், மேற்கொண்டு நடிக்க அவனை யாரும் அனுமதிக்கவில்லை. நாடகத்தை அத்துடன் நிறுத்திவிட்டார்கள். சுந்தரமூர்த்தி பிள்ளை ஒரு கார் கொண்டு வரச்செய்து, அவனை அழைத்துக்கொண்டு தான் தங்கியிருந்த இடத்துக்குப் போய்விட்டார். மாசிலாமணியின் அம்மாவும் முதலில் கலக்கமடைந்த போதிலும், பின் மூர்ச்சை தெளிந்ததும் கொஞ்சம் தைரியமடைந்தார்கள். போகிறபொழுது, "ஏதோ படிக்கிறதை விட்டுவிட்டு, டிராமா, கிராமான்னு சொல்லி, ஏன் இப்படி

மூர்ச்சை போடணும்!" என்று ஒரு பாட்டு பாடிவிட்டுதான் அவர்கள் போனார்கள்.

அதற்கப்புறம் இரண்டு மூன்று நாட்கள் நான் மாசிலாமணியைப் பார்க்கவில்லை. ஏதாவது உடம்புக்குச் சரியில்லையோ என்று நினைத்து ஒரு நாள் மாலை அவன் தங்கியிருந்த வீட்டில் போய் பார்த்தேன். எங்கோ வெளியில் போயிருப்பதாக வேலைக்காரன் சொன்னான். அதற்கப்புறம் பரிட்சைகள் ஆரம்பித்தன. அதில் நான் மீண்டும் அவனைப் பார்க்க முடியவில்லை. ஆனால் அவன் பரிட்சைக்கு வராதது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. ஏதோ ஓய்வாக இருக்கவேண்டுமென்று டாக்டர் சொன்னதாகவும், அதன்பேரில் மாசிலாமணியை அவன் அப்பா அழைத்துக்கொண்டு போயிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். அதற்குமேல் தெரிந்துகொள்ள அப்பொழுது எனக்கு நேரமில்லாது போயிற்று.

பரிட்சைகள் முடிந்ததும் என்னால் வெளியில் தலைகாட்ட முடிந்தது. அதற்குள் மாசிலாமணி மீண்டும் சென்னைக்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டதால், அவனைப் பார்க்கப் போனேன். அடையாரில் ஒரு தனிமையான இடம் — சுற்றிலும் பெரிய தோட்டமும், மத்தியில் அழகான மாளிகையும் உள்ள இடத்தில்—அதற்குமுன் யாரோ ஒரு ஜமீன்தார் குடியிருந்த பங்களா என்று சொன்னார்கள்-அவர்கள் தங்கியிருந்தார்கள். நான் போனதும் காவல்காரன் தடுத்து நிறுத்தினான். இது புதுமையாக எனக்குப்பட்டது. மாசிலாமணியைப் பார்க்கவேண்டுமென்று சொன்னதும், என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, என்னை ஒரு ஹாலில் உட்காரவைத்து, என் பெயரை எழுதி வாங்கிக்கொண்டு உள்ளே போனான். மாசிலாமணியைப் பார்க்க இவ்வளவு காவலா என்று நினைத்தேன்.

நான் உட்கார்ந்திருந்த ஹால் மிகவும் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு இருந்த ஓவியங்கள், சிற்பங்கள் இவைகளைச் சுற்றிப் பார்த்துவந்தேன். அதையடுத்திருந்த ஒரு அறையில், வேடிக்கையான கத்தி, கவசங்கள், தலைமுடிகள், கேடயங்கள்முதலியன இருந்தன. அந்த ஜமீன்தார் இத்தகைய பழம் சாமான்களை ஒரு பொழுதுபோக்காகச் சேர்க்கிறார் என்று நினைத்தேன். ஆனால் அந்தப் பழைய சின்னங்கள் புதுமையாக— நமது நாட்டுக்குப் புறம்பானவைகளாகத் தோன்றின. கடைசியாக அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஒரு இரும்புக்கவச மணிந்திருந்த , போர்வீரன்—மரப்பொம்மை மீது இரும்புக்கவசம், முடி முதலியன போடப்பட்டிருந்தன—அதைப் பார்த்ததும் ரோம் போர்வீரன் போலிருந்தது. திரும்பவும் சுற்றிலும் பார்த்தேன், எல்லாம் ரோம் நாட்டு வரலாறில் காண்பிக்கப்படுபவைகளாக இருந்தன. ரோம் நகரக் கண்காட்சிசாலையிலிருந்துதான் இவைகளை எடுத்துவந்தார்களோ என்று நான் ஆச்சரியத்துடன் அவைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தேன்.

அந்தச் சமயத்தில் ஒரு கதவு மெதுவாக, அசைந்தது. கவசமணிந்த ஒரு உருவம்—ரோம் போர்வீரன் ஒருவன் உள்ளே நுழைந்து நின்றான். எனக்கு ஆச்சரியம் போய், பயம் தோன்றியது. எங்கோ கனவுகாண்பதுபோலிருந்தது, ஆனாலும் எதிரே ஒரு ரோம் வீரன் நிற்கிறான். பக்கத்திலிருந்த நிலைக்கண்ணாடியில் என்னைப் பார்த்துக்கொண்டேன். நானும் இருந்தேன். கண்ணைக் கசக்கிக்கொண்டு, ரோம் உடைகளைப் பார்த்ததால் ஏற்பட்ட மனப்பிரமை என்று நினைத்து, வெளியே போக திரும்பினேன். ஆனால் அந்த உருவம் என் பக்கத்திலேயே வந்துவிட்டது. பயத்தால் என் மார்பு படபடத்தது, ஓடலாமென்றாலோ கால்கள் வளைந்துவிட்டன. அந்தப் பொல்லாத உருவம் அத்துடன் நின்றதா? "முத்து" என்று என் பெயரையும் கூப்பிட்டது!

ஆனால் அந்தக் குரல் எனக்குப் பழக்கமானதாகத் தோன்றியது. தைரியத்தை வரவழைத்துக்கொண்டு திரும்பிப் பார்த்தேன். அதற்குள் அந்தப் போர்வீரன் தன் இரும்பு முடியை எடுத்துவிட்டான். அந்தப் போர்வீரன் வேறு யாருமில்லை, என்னுடன் படிக்கும் தங்கவேலுதான்!

"என்னடா இந்த வேஷம்?" என்று கேட்டேன்.

"இங்கே இருக்கிற எல்லோரும் இதுமாதிரி வேஷந்தான் போட்டுக்கொள்ளவேண்டும்."

"ஏன்?"

"மாசிலாமணியைப் பார்க்கவேண்டுமென்றால், இப்படித்தான் போகவேண்டும்!"

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

தங்கவேலு விளக்கங்கொடுக்க ஆரம்பித்தான். "அன்று நாடகத்தில் மாசிலாமணி மூர்ச்சையானதி லிருந்து அவன் முன்போலில்லை. மணிக்கணக்கில் பேசாமல் உட்கார்ந்திருப்பானாம். பின் திடீரென்று நாடகத்தில் வரும் உரையாடல்களை ஒப்பிப்பானாம். சுந்தரமூர்த்தி பிள்ளை பல டாக்டர்களிடம் காண்பித் தார். அவனுடைய உடம்பில் எத்தகைய பல வீனத்தையும் காணமுடியவில்லை. கடைசியாக ஒரு டாக்டர் காரணத்தைக் கண்டுபிடித்தார். நாடகத்தில் ஒரு மரம் அவன் தலைமீது விழுந்ததல்லவா? அதனால் வெளியில் காயங்கள் உண்டாகவில்லையென்றபோதி லும், அது அவன் மூளைக்குக் கேடுசெய்துவிட்டது. ஒருவகையில் அவன் இப்பொழுது புத்தி சுவாதீன மில்லாதவன்."

நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன். கொஞ்சமும் நான் எதிர்பார்க்காத செய்தியாக இருந்தது.

"மூர்ச்சையாவதற்குச் சற்றுமுன் இருந்த நிலை, நாடகத்தில் அவனுக்கு இருந்த உணர்வு அப்படியேத் தொடர்ந்துவிட்டது. அவனது மன நிலை இரண்டா யிரம் வருஷத்துக்கு முன்பு—ரோம் நாகரிகத்துக்குப் போய்விட்டது. அவனது நினைவுகள், பேச்சுகள் எல்லாம் மார்க்கஸ் ஆண்டனி—அந்த ரோம்நாட்டு வீரனுடையதாக ஆகிவிட்டன."

"நாடகம் போடப்போய் இந்த நிலை வந்துவிட் டதா?"

"அவன் அந்த நாடக பாத்திரமாகவே ஆகிவிட் டான். எனவே இப்பொழுது பேசுவது, நடமாடுவது எல்லாம் மாசிலாமணியல்ல. மார்க்கஸ் ஆண்டனி! ரோம் நாட்டு வீரன்! சீசரின் நண்பன்! புருடஸ், காசியஸ் முதலியவர்களைத் தோற்கடித்தவன்! ரோம் சாம்ராஜ்யத்தை ஆளும் மூவரில் ஒருவன்—கிளியோ பட்ராவின் காதலன்!"

"வேடிக்கையான நிலை"

"இதற்கு டாக்டர் சொல்லியுள்ள சிகிச்சையும் வேடிக்கையானது. அவன் ரோம் நாட்டு வீரன் ஆண் டனியாக ஆகிவிட்டதால், அவனைச் சூழ்ந்து இருப்ப வைகளும் அந்த ரோம் வீரனுக்கு ஏற்ற வகையில் அமைக்கச் சொன்னார். அவனுடன் பழகுபவர்களும் ரோம் வீரர்களாக, செனெட்டர்களாகத்தான் இருக்க முடியும். எனவேதான் அவனைப் பார்க்கப் போகிற வர்கள் ரோம் நாட்டு உடைகளை அணிந்துகொண்டு போகவேண்டியிருக்கிறது."

"அப்படியானால் நான்..."

"ஒரு போர்வீரன் அல்லது தளபதி உடையைப் போட்டுக் கொண்டு உள்ளே போகவேண்டும். உள்ளே போனதும் மறந்துவிடக்கூடாது, நீ சந்திப்பது மார்க்கஸ் ஆண்டனியை—அவனுடைய காலத்தில்."

வேறு வழியின்றி, அங்கு இருந்த கவசங்கள், தொப்பிகள், இவைகளைப் பார்த்து எனக்குச் சரியானதைத் தேர்ந்தெடுத்துப் போட்டுக்கொண்டேன். உள்ளே போனதும் எப்படியெப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று தங்கவேலு எனக்குச் சொல்லிக் கொடுத்தான். அவற்றை நன்றாக ஞாபகத்தில் வைத் துக்கொண்டு, அவன் காட்டிய வழியாக, இருண்ட ஒரு ஹாலைக் கடந்து, கடைசியாக ஒரு கதவைத் திறந்துகொண்டு உள் நுழைந்தேன், ரோம் காலத்திற் குள் அடியெடுத்துவைத்தேன்!

படக்காட்சிகளில் வருவதுபோன்று, அந்தக்காலத் துப் பண்பாட்டில் அந்த அந்த அறை அலங்கரிக்கப் பட்டிருந்தது. கோடுகள் அழுத்தப்பட்ட தூண்கள், விளிம்புகள் வளைந்த மேல் அமைப்புகள், லையர் வாத்தி யங்கள், திராட்சைக் கொடிகள், தங்க கோப்பைகள்! ஒரு அழகிய மஞ்சத்தில் ஆண்டனி அமர்ந்திருந்தான். அவன் காலடியில் ஒரு அடிமை—அந்த வீட்டு வேலைக் காரன் என்று நினைக்கிறேன்—அமர்ந்து, கால்களைக் கழுவிக்கொண்டிருந்தான். சுற்றிலும் படைத்தலைவர் கள்—அவர்களில் சிலரை நான் அடையாளங் கண்டு கொள்ள முடிந்தது. தூரத்தில் ஒரு பலகைமீது கிரேக்க நாட்டுப் பெரியவர்போல உட்கார்ந்திருந்தவர் தான் சுந்தரமூர்த்தி பிள்ளை. அப்பொழுது மாசிலா மணிக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தவர் டாக்டர்—அவரும் ஒரு வீரனைப்போல வேஷம் போட்டுக் கொண்டுதான் உள்ளே வந்திருந்தார். ஒருநாள் அவன் வேஷம் போட்டுக்கொள்ளப்போய், இப்பொழுது எவ்வளவு பேர்கள் வேஷம் போடவேண்டி வந்து விட்டது!

நான் உள்ளே போய் நின்றதும் எனக்குச் சொல்லிக் கொடுத்தபடி "ஹெயில் ஆண்டனி!" என்று கையை உயர்த்திக் கூவினேன். மற்றவர்களும் கையை உயர்த் தித் தாழ்த்தினார்கள். ஆண்டனி மெதுவாகத் திரும் பிப்பார்த்தான்.

"ரோம் நகரிலிருந்து செய்தி!" என்று பணிவா கச் சொன்னேன்.

"என்ன செய்தி!" என்று ஆண்டனி கேட்டான், அலட்சியமாக.

"ஆக்டேவியஸ், லெபிடியஸ் இருவரும் பாம்பே மேல் போர்தொடுத்துவிட்டார்கள்!"

ஆண்டனி கடகடவென்று சிரித்தான். பக்கத்தி லிருந்த தளபதி ஒருவரைப் பார்த்து, "ஈனோபரஸ்! பார்த்தாயா, இந்தப் பழைய செய்தியே எனக்கு இரண் டாவது தடவையாக இன்று வருகிறது! எய், இங்கே வா!" என்று என்னை ஆண்டனி அதட்டினான்.

தங்கவேலு சொல்லிக்கொடுத்ததை நான் ஒப்பித் தேன். ஆனால் எனக்கெப்படி தெரியும் எனக்கு முன்பே ஒருவர் அதை உபயோகித்துவிட்டார்,

ரென்பது. சரித்திரத்தில் வருகிற ஆண்டனி மிகவும் கோபக்காரன் என்றும். செய்தி கொண்டுவருகிறவர் களைப் பிடிக்கவில்லை யென்றால் உடனே நன்றாக அடித்துவிடுவானென்றும் நான் படித்திருக்கிறேன். எனவே கொஞ்சம் பயத்துடனேயே இந்த நவீன ஆண்டனியின் முன் போனேன்.

நான் போட்டிருந்த இரும்புக் கவசம். எனக்குச் சரியில்லாததால். விலாப்புறங்களில் மிகவும் வலி யெடுத்தது; காலில் சுற்றிக் கட்டப்பட்டிருந்த வார் காலை நகர்த்தினால். சதையை அறுத்துவிடும்போலிருந் தது. தலையில் வைக்கப்பட்டிருந்த இரும்பு தலையணி கழுத்தில் அழுத்திக்கொண்டிருந்தது. மிகவும் கஷ்டத்துடன். அந்த ரோம் வீரனுடைய உடைகளைச் சுமந்துகொண்டு நான் நடக்கவேண்டியிருந்தது.

ஆண்டனியோ மிகவும் ஆத்திரத்துடன் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தான். என்னுடைய கவனம், அவன் கையிலிருந்த வாளின்மீது பதிந்திருந்தது. ஏதாவது பேசும்பொழுது, அந்த வாளால் என்மீது இரண்டு தட்டு தட்டிவிட்டால். என் கதி என்ன ஆவது?

"வேறு ஏதாவது செய்தியிருந்தால் சொல்!" என்று ஆண்டனி சத்தமிட்டான். என்ன பதில் சொல்வதென்று எனக்குப் புரியவில்லை. சங்கடமான நிலை. வேஷத்தின் முழுப்பாடமும் தெரியாமல் ஏன் இந்த வேஷத்தைப் போட்டுக்கொண்டோம் என்றாகிவிட்டது. ஆனால் அங்கு நின்றுகொண்டு அதை நினைத்து என்ன பயன்? ஏதாவது உடனே சொல்லியாகவேண்டும். திடீரென்று. "ஆக்டேவியஸ் சீசர் மிகவும் கடுமையான நோய்வாய்ப்பட்டு. கிடக்கி றார்." என்று ஒரு செய்தியைப் போட்டேன்.

ஆண்டனி மட்டுமல்ல. அவன் பக்கத்தில் நின்ற தளபதிகள்கூட என் செய்தி கேட்டுத் திகைத்துப் போய்விட்டார்கள். ஆக்டேவியஸ் படைகளைத் திரட்டிக்கொண்டு வருகிறான் என்பதின்பேரில் தான், எதிர்த்து எப்படிப் போராடுவதென்று அவர்கள் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் நான் சொல்லியது. ஒரு திடீர்ச்செய்தியாக இருந்தது. "ஈரோஸ்! இந்தச் செய்தி உண்மையா? அப்படி யானால் அவன் படைகளைத் திரட்டி நம்மை எதிர்த்து வருவதாக வந்த பல செய்திகள்?" என்று ஆண்டனி தனது தளபதிகளில் ஒருவரைக் கேட்டான்.

"காய்ச்சல் உண்டானது உண்மைதான். ஆனால் அது குணமாகி இப்பொழுது படைகளைத் திரட்டி வருகிறான்" என்று அவன் சமாதானம் சொன்னான்.

"என்ன?" என்று ஆண்டனி மீண்டும் என்னைக் கேட்டான்.

நான் விடுவதாயில்லை. சரித்திரமோ, மற்றவர்கள் சொன்னவை எல்லாம் எக்கேடு கெட்டாலும் கெடட் டும் என்று, "பிரபு! அவன் படைகளைத் திரட்டி வந்தது உண்மை! ஆனால் உங்களை நினைத்ததும், அவனுக்குக் கடுமையான காய்ச்சலே வந்துவிட்டது!" என பதிலளித்தேன்.

இந்தப் புகழ்ச்சியில் ஆண்டனி சற்றுச் சமாதானம் அடைந்து சிரித்தான். "இருக்கும்! கொஞ்சங்கூட வீரம் இல்லாத சிறுபயல்தானே அவன்! ஈனோபரஸ்! பிலிப்பை அமர்க்களத்தில் நான் காசியஸின் படை களைவிரட்டியடித்து வெற்றிமுழக்கஞ் செய்தேன். அவனோ புருடஸ் படையுடன் நிற்கமுடியாது தத்த ளித்தான்; நான் அவனுடைய உதவிக்குப்போய், அவனை விடுவித்து. புருடஸ் படைகளைச் சிதடித் தேன். அவன் இப்பொழுது என்னை எதிர்க்கிறானாம்! ஆ! எவ்வளவு நன்றிகெட்ட தன்மை, எவ்வளவு துணிவு! அவனைத் தண்டிக்காமல் நான் விடப்போவ தில்லை! துரோகிகளைச் சூறையடிய இந்தவாள், இன்னும் இருக்கிறது. இந்தத் துரோகியையும் பதம் பார்க்க!" ஆண்டனி ஆவேசத்துடன் பேசினான்.

பின் தனக்குள்ளாக ஏதோ முணுமுணுத்துக் கொண்டு. ஆண்டனி தன் விரல்களால் வாளைத் தட் டிக்கொண்டு அங்குமிங்கும் உலவினான். உலவுவதை நிறுத்தி, தன் விரல்களைப் பார்த்து, "ஈனோபரஸ்! இந்தக் காயம் எப்படி உண்டானது தெரியுமா?" என்று கேட்டான்.

"அது உனக்கு ஆப்ரேஷன் செய்ததால் உண் டான தழும்பு!" என்று நான் என்னையுமறியாமல், பதில் சொன்னேன்! ஆண்டனி புரியாமல் நின்றான். சுற்றிலும் இருந்தவர்கள் என்னை உறுத்துப்பார்த்தார் கள். நான் செய்த பிசகைக் கண்டு. என்முன்னே நிற்பது ஆண்டனி என்பதை மறந்து, மாசிலாமணி என நினைத்துப் பேசிவிட்டேன்.

"இது ஆப்ரிகஸ் சண்டையில் ஏற்பட்ட காய மல்ல. சிரியா சண்டையில் ஏற்பட்ட காய மாகும்!" என்று ஆண்டனி பெருமைப்பட்டுக்கொண் டான்.

அடிமை ஒருவன் ஒரு மதுக்கோப்பையைக் கொண்டுவந்து நீட்டினான். அவனுக்கு மருந்து கொடுப்பதற்கு டாக்டர் கையாண்ட முறை அது ரோம் வீரனைப்போலவே. ஆண்டனி அதை வாங்கி ஒரே மூச்சில் குடித்துவிட்டு. பின்னால் வீசினான்.

"எங்கே கிளியோ! என் நைல்நதி நாகம்! அவ ளில்லாமல் எனக்குப் பொழுதேபோகவில்லை" என்று கேட்டான்.

"எகிப்து நாட்டுக் கப்பல்களைச் சேகரித்துவர அரசி சென்றிருக்கிறார்கள். சீக்கிரம் வந்துவிடுவா கள்!" என்று ஈனோபரஸ் பதிலளித்தான்.

மற்றொரு தளபதி என்னைத் தட்டி, வெளியே போகும்படி சைகை செய்தான். முதலில் வந்தது போலவே, "ஹெயில் ஆண்டனி!" என்று வணக்கம் செலுத்திவிட்டு, வெளியில் வந்தேன்,

(தொடரும்)

Regd. No. M 6296

"மன்றம்" விற்பனையாளர்கள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் மன்றம் இதழுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை.

செங்கற்பட்டு
காரைக்கால்
விருதுநகர்
கோவில்பட்டி
சங்கரன்கோவில்
சீர்காழி
அம்பாசமுத்திரம்
திண்டுக்கல்
கோபிச்செட்டிப்பாளையம்
திருவள்ளூர்
ஈரல்
அம்மையப்பன்
பண்ருட்டி

மன்றம் விற்பனையாளர் இல்லாத ஊர்களிலும் விற்பனையாளர் தேவை.

விபரங்களுக்கு :

நிர்வாகி,
'மன்றம்'
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

விற்பனையாளர்க்கு

விற்பனையாளரில் பெரும்பாலோர், தாங்கள் தொடக்கத்தில் கொடுத்த வாக்குறுதிகளை அறவே மறந்துவிட்டு, கண்ணியக் குறைவாக நடந்து கொள்வதைக் கண்டு மிக வருந்துகிறோம். அப்போதைக்கப் போது பாக்கித் தங்காத வகையில், பட்டியல் தொகையை அனுப்பி வைக்க வேண்டுகிறோம். பட்டியல் தொகை முன் கூட்டியே வந்து சேராவிடில், இதழ்கள் அனுப்பப்படுவது நிறுத்தப்படும் என்பதை உறுதியாய்த் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிக இதழ்கள் வேண்டுவோர் அதற்கான முன்பணம் அனுப்பவேண்டுகிறோம். போதுமான முன்பணமில்லாது இதழ்கள் அனுப்ப இயலாது.

நிர்வாகி,
"மன்றம்"

'மன்றம்' கட்டண விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறுமாதம் ,, ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,, ,,	0—4—0	0— 5—0

தோழர்களுக்கு

மன்றத்திற்கு புதிதாக சந்தா அனுப்பும் தோழர்கள் தங்கள் முகவரியைத் தெளிவாக எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

நிர்வாகி,
"மன்றம்"

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.,